# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 23 இதழ் - 3 மார்ச் 2010



**கிறிஸ்துவின் சபை**

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

e-mail : Kangayamcofc@eth.net.

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

**பதிமூன்றாம் வேனிற்கால வேதாகம முகாம்**

மற்றும்

**"திருமறை தியானம்" நேயர்கள் &**

**"திருமறை ஆசான்" வாசகர்கள் கருத்தரங்கம்**

**இடம் :**

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 3,4,5, - 2010 (திங், செவ், புதன்)**

**உணவும், தங்குமிடமும் இலவசம்**

**பதிவுக் கட்டணம் : பெரியவர்கள் ரூ. 100 /- சிறியவர்கள் ரூ. 50 /-**

**முகாமின் சிறப்பம்சங்களை அறிய 15-ம் பக்கம் பார்க்கவும்.**

**கிறிஸ்துவின் சபை**

288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

**PH. : 04257 - 230603 Cell : 98427 - 30382, 99655 - 30385**

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு.**
**ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**


# ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. ஜெபம் பண்ணுவது எப்படி? ........ 9
3. பெண்கள் பகுதி ........ 13
4. வாலிபர் பகுதி ........ 16
5. சிறுவர் பகுதி ........ 19
6. நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால்... ........ 21
7. வேதாகமம் கொடுத்தலைப் பற்றிய புத்தகம் ........ 23
8. ஆச்சரியமான தேவன் ........ 26
9. தேவனுடைய வசனத்துக்கு நடுங்குதல் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 23 MARCH - 2010 Issue - 3


ஆசிரியர் உரை

## நாங்களோ சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்

எல்லாச் சிறப்பையும் தன்னுள் தாங்கி, காலங்காலமாகச் செழித்து வாழ்ந்து, செம்மொழி என்ற சிறப்புத் தகுதியோடு செருக்கு நடைபோட்டு வரும் நம் தாய்மொழியாம் தமிழ் மொழியில், " நானோ ", " நாங்களோ " மற்றும் " அவனோ ", "அவர்களோ" போன்ற வார்த்தைகள் எல்லா நேரங்களிலும் பயன்படுத்தப்படும் வார்த்தைகளாக இல்லாமல், கவனமான பரிசீலனைக்குப் பிறகு பயன்படுத்தப்படும் வார்த்தைகளாக உள்ளன. ஆம், ஒரு நபரை வேறொரு நபருடைய குணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தோ அல்லது ஒரு கூட்டத்தை வேறொரு கூட்டத்தின் செயல்பாட்டோடு ஒப்பிட்டுப்பார்த்தோ அல்லது ஒரு அமைப்பை வேறொரு அமைப்பின் திறனோடு ஒப்பிட்டுப் பார்த்தோ தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. அதாவது, ஒருவரிடமிருந்து வேறொருவர் சிறந்து விளங்கும் போது அல்லது ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று வேறுபட்டுத் திகழும்போது அல்லது ஒன்றிடமிருந்து மற்றொன்று உயர்ந்து நிற்கும்போது, அதை உன்னிப்பாகக் கவனிக்கும் சம்பந்தப்பட்டவர்களால் இவ்வார்த்தைகள் தாராளமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இச்சிறப்பு வார்த்தைகளில் ஒன்றாகிய " நாங்களோ " என்பதைத்தான், முதல் நூற்றாண்டில் மெய்க்கிறிஸ்தவத்தின் உபதேசத்தை உயிராகவும் மூச்சாகவும் கொண்டு, அன்றைய உலகமெல்லாம் சுமந்து திரிந்த, ஒப்பாரும் மிக்காருமற்ற கிறிஸ்துவின் ஊழியக்காரனான பவுலடியார், " நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலாயும், கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார் ". (1 கொரி.

1:23) என்று கூறியுள்ளார். இவ்வார்த்தையைப் பவுலடியார் பயன்படுத்தினார் என்று சொல்வதை விட, அப்படிப் பயன்படுத்த ஆவியானவர் அவரை ஏவினார் என்று சொல்வது தான் சரியாக இருக்கும். அப்படித்தானே.

சரி, இவ்வார்த்தையைப் பயன்படுத்துவதற்கான அவசியம் பவுலடியாருக்கு ஏன் வந்தது என்பதைத் தெரிந்துகொள்ள, நமது வழக்கத்தின்படியாக, இதன் பின்னணிக்குள் இப்பொழுது நமது சிந்தையைச் செலுத்துவோம்.

பண்டைய கிரேக்கத்தின் முக்கியப் பட்டணமாகத் திகழ்ந்தது தான் கொரிந்து. அந்நாட்களில் இது ஓர் உலகளாவிய வியாபார கேந்திரம். இப்படிச் சொல்வது இப்பட்டணத்திற்குப் பெருமை சேர்ப்பதாக இருந்தாலும், இப்பட்டணத்தின் சிறுமைக்கான காரணங்களும் இல்லாமலில்லை. ஆம், கொரிந்து பட்டணம் விக்கிரக வணக்கத்தின் மையமாகவும், ஒழுக்கச் சீர்கேட்டின் இருப்பிடமாகவும் விளங்கியது. இப்படிப் பெருமையும், சிறுமையும் சேர்ந்திருந்த இப்பட்டணத்தில், பவுலடியார் தன்னுடைய இரண்டாம நற்செய்திப் பயணத்தில் கால் பதித்து, கிறிஸ்துவின் நற்செய்தியை நறுக்குத் தெறித்தாற் போல் எடுத்துச் சொல்லி, கிறிஸ்துவின் சபையை ஏற்படுத்தினார் (அப். 18:1-17) இந்தச் சபையாருக்குப் பவுலடியார் ஆவியின் ஏவுதலால் இரண்டு நிருபங்களை, இரண்டு வித்தியாசமான காரணங்களுக்காக எழுதினார். அவற்றுள், முதல் நிருபத்திற்கென்று இரண்டு நோக்கங்கள் அவருக்கு இருந்ததாக நாம் கூறமுடியும். 1. கொரிந்து சபையாரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு கூறுதல் 2. ஒழுக்கச் சீரழிவு நிறைந்த சமுதாயத்தின் மத்தியில் விசுவாசிகள் தங்களைக் காத்துக்கொள்ள உதவுதல். இந்நிருபத்தைப் பவுலடியார், தன்னுடைய மூன்றாம் நற்செய்திப் பயணத்தின் போது, எபேசுவில் தங்கியிருந்த காலத்தின் (அப். 19,9,10) இறுதி நாட்களில் எழுதியுள்ளார்.

இப்படி, கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் நிருபத்தின் முதல் அதிகாரத்தை இரண்டு பகுதிகளாக நாம் பிரிக்கலாம். அதில், இரண்டாம் பகுதி, " கிறிஸ்துவின் சிலுவை பற்றியும், அந்தச் சிலுவைக்கான வித்தியாசப்பட்ட பார்வை " பற்றியும் பேசுகிறது (1:18-31). இப்பகுதியினூடே வருவது தான் நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் வசனப்பகுதி. இவ்வசனத்தில் பவுலடியார், தானும், தன்னோடிருப்பவர்களும் சிலுவைக்காகக் கொண்டிருக்கும் பார்வைக்கும், மற்றவர்களுடைய பார்வைக்கும் வேறுபாடு உள்ளதென்பதைத்தான் "நாங்களோ" என்ற வார்த்தையின் மூலம் பளிச்சென வெளிப்படுத்தியுள்ளார். அதாவது, சிலுவைக்கான தங்களுடைய பார்வையைப் பிறருடைய பார்வையோடு ஒப்பிட்டுப் பேசியுள்ளார். அப்படியானால், யாரோடு இப்படி ஒப்பிட்டுப் பேசியுள்ளார்?.

அவர்கள் வேறு யாருமல்ல, அவருடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவத்தின் எதிரிகளான யூதர்களும், அறிவுப் பித்தர்களான கிரேக்கர்களும் தான். இந்த யூதர்கள் மோசேயின் பிரமாணத்தின்படியான பக்தி வாழ்க்கையை நடத்தியவர்கள்.

ஆனால், மோசேயின் பிரமாணப் போதனைகளுக்கு முழுமையாகச் செவி கொடுக்காமல், எதற்கெடுத்தாலும் அடையாளம் கேட்டு நச்சரித்தவர்கள் (மத். 12:38; 16:1; மாற்கு 8:11,2; 4:48) கிரேக்கர்களோ தத்துவார்த்த ரீதியிலான உலக ஞானத்தில் பைத்தியங் கொண்டு அலைந்தவர்கள். ஆனால், யூதர்களின் பக்தியோ, கிரேக்கர்களின் ஞானமோ கிறிஸ்துவின் சிலுவை பற்றிய சிறப்பையும், அதின் மேன்மையையும், அது தரும் நன்மைகளையும் உணர்ந்து கொள்ளுவதற்கும், அறிந்து கொள்வதற்கும் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. அப்படியானால், இவர்கள் கொண்டிருந்த பக்தியினாலும், பெற்றிருந்த அறிவினாலும் என்ன பயன்? ஒருவனுடைய பக்தியும், அறிவும் அவனுக்குச் சிலுவையின் மேன்மையை உணர்த்தி, பரலோகத்திற்கான பாதையைக் காட்டாவிட்டால், அவைகளை நேரிடையாகக் குப்பைத் தொட்டிக்கு அனுப்புவது தான் நல்லது. இதில் யாருக்கும் எந்தத் தயக்கமும் தேவையில்லை.

இங்கே, தான் தேவனுக்குப் பிரியமாயிருப்பதற்கு தேவையானது எது என்பதை மெத்தப்படித்த பவுலடியார் நன்றாகவே அறிந்திருந்தார். ஆகவே தான், அதே முதலாம் நிருபத்தின் இரண்டாம் அதிகாரத்தில் இப்படியாக எழுதியுள்ளார். "…. இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருக்கிறேன்" (1கொரி 2:2) என்று. ஏனெனில், மனுக்குலத்தின் அவசரத் தேவையாக கிறிஸ்துவின் சிலுவை தான் உள்ளது. அன்றைக்கும் இது தான் தேவை. இன்றைக்கும் இதுதான் தேவை. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பரியந்தம் இதுதான் தேவை.

ஆனால், நாம் வாழும் இந்நாட்களில் கிறிஸ்துவின் சிலுவைக்கு எப்படிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது? சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்து தான் எல்லாப் பிரசங்கிகளாலும், எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் பிரசங்கிக்கப்படுகிறாரா? சொல்லுங்கள். கிறிஸ்துவின் சிலுவையை இன்றைய கிறிஸ்தவம் "முறை" வைத்தல்லவா பிரசங்கிக்கிறது. அதாவது, வருடத்தின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான் கிறிஸ்துவின் சிலுவை நினைக்கப்பட வேண்டும் மற்ற சமயங்களில் அது நினைப்பதற்கும், பேசப்படுவதற்கும் லாயக்கற்றது என்பது போல. அதனால் தானே, வருடத்தின் சில மாதங்களில் "பெத்லகேமில் பிறந்த இயேசு" பற்றிய சத்தம் கேட்கும். பிற மாதங்களில் "அற்புதங்களைச் செய்த இயேசு மற்றும் ஆசீர்வாதங்களை வாரி வழங்கும் இயேசு பற்றிய வர்ணணை வலம் வரும்". பிறகு வருடத்தின், இந்த மாதங்களில், பெத்தலையில் பிறந்து, நாசரேத்தில் வளர்ந்த இயேசுவும், நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்து, அற்புதங்கள் செய்த இயேசுவும் லாவகமாக ஒதுக்கப்பட்டு, கொல்கொதா மலையை நோக்கி ஓட்டம் நடக்கும். இதுதானே நடந்து கொண்டிருக்கிறது!.

இங்கே நான் ஒன்றைக் கேட்கிறேன். பேதுரு, பவுல் போன்ற தேவ மனிதர்கள் தங்கள் பிரசங்கங்களில் எங்காவது பெத்தலையில் பிறந்த இயேசு பற்றியோ, அற்புதங்கள் செய்த இயேசு பற்றியோ அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பேசியிருக்கிறார்

களா? இப்படிச் சொல்வதால் இயேசுவின் பிறப்பையும், அவருடைய அற்புத வல்லமையையும் நான் குறைத்து மதிப்பிடுகிறேன் என்று யாரும் தவறாக எண்ணிவிட வேண்டாம். ஆனால், அப்போஸ்தலர்கள் ஏன் அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசவில்லை என்று தான் கேட்கிறேன்? அவர்கள் இயேசுவின் பிறப்புக்கும், அற்புதச் செயலுக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசங்கிப்பதை தேவன் தமது ஆவியானவர் மூலமாக ஏன் அனுமதிக்கவில்லை என்று தான் கேட்கிறேன்? எது முக்கியம் என்று நமக்குத் தெரிந்த அளவு ஒருவேளை ஆவியானவருக்குத் தெரியாமல் இருந்திருக்குமோ?!

அருமையானவர்களே, எல்லாக் காலங்களிலும் வாழ்ந்த, வாழ்கின்ற மனுக்குலத்துக்கான அவசிய, அவசரத் தேவை, பாவத்தினால் தேவனிடம் இருந்து பிரிந்து போன மனிதன் மீண்டும் தேவனிடம் சேர்வதே. அப்படிச் சேர்க்கப்படுவதற்கு அவனுக்குத் தேவை, பாவமன்னிப்பு-இரட்சிப்பு. இந்த இரட்சிப்புக்கு ஒருவனை வழிநடத்தும் வல்லமை கிறிஸ்துவின் சிலுவைக்கும், சிலுவையின் உபதேசத்துக்கும் மட்டுமே உண்டு. இயேசுவின் பிறப்பு ஒருவனை இரட்சிப்புக்கு வழிநடத்துவதை விட, இயேசுவின் அற்புதம் ஒருவனை இரட்சிப்புக்கு வழி நடத்துவதைவிட, இயேசுவின் சிலுவை ஒருவனை சிறப்பாக வழி நடத்தும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது, இரட்சிப்பை சுவிசேஷம் அருளுகிறபடியால் தான், கிறிஸ்துவின் நற்செய்தியை இரட்சிப்பின் சுவிசேஷம் என்கிறோம் (எபேசி. 1:13).

இயேசுவானவர், தமது பிரதான கட்டளையில், "…. உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்றார் (மாற். 16:15). இங்கே சுவிசேஷம் என்ற வார்த்தைக்கான பொருள் என்ன தெரியுமா?. இதற்கான விளக்கம் 1கொரி. 15:1-4 வசனங்களில் உள்ளது. அதாவது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய இம்மூன்றும் தான் சுவிசேஷம் என்று இவ்வசனங்கள் தெளிவாகச் சொல்லுகிறது. இரட்சிப்பை அருளும் சுவிசேஷத்தில், கிறிஸ்துவின் பிறப்பும், அற்புதங்களும் அடங்கவில்லை என்பது இப்பொழுது உங்களுக்குப் புரிகிறதா? இல்லையா? ஆகவேதான், அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சிலுவையைச் செல்லுமிடமெங்கும் எடுத்துச் சென்று அதை அப்படியே தூக்கிப் பிடித்தனர். அப்போஸ்தலர்கள் ஒருபோதும் கிறிஸ்துவை முறை வைத்துப் பிரசங்கிக்கவில்லை. மாறாக, எங்கும், எல்லாச் சமயத்திலும் கிறிஸ்துவின் சிலுவையை முக்கியப்படுத்தியே பிரசங்கித்தனர்.

சரி, இப்படி ஆவியானவர் பார்வையிலும், அப்போஸ்தலர்கள் பார்வையிலும் முக்கிய இடம் பெற்று, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மனுக்குலத்துக்குத் தொடர்ந்து இரட்சிப்பை நல்கி வரும் கிறிஸ்துவின் சிலுவை நமக்கு எடுத்துச் சொல்லும் வேறு சில பாடங்கள் என்ன என்று கீழே பார்ப்போம்.

## I கிறிஸ்துவின் சிலுவையும், தேவ ஞானமும்.

கிறிஸ்துவின் சிலுவை நமக்குக் கற்றுக் கொடுக்கும் அநேக பாடங்களுள் முதல் பாடம், பரலோக தேவனுடைய ஞானம் பற்றியது.

சர்வ வல்ல தேவனுடைய ஞானம் பற்றி முழுமையாக எடுத்துக் கூற எந்த ஒரு மனிதனும் தகுதியானவனல்ல என்பது சர்ச்சைக்கிடமற்ற தீர்மானமான கருத்து. ஏனெனில், மனிதனுடைய மிஞ்சின ஞானம் தேவனுக்கு முன்பாகப் பயித்தியமாயிருக்கிறது (1கொரி. 1:20). ஒருவேளை நமக்கு வேண்டுமானால் சாலமோன் ராஜாவின் ஞானம் எவரெஸ்ட் சிகரம் போன்று உயர்ந்து விளங்கலாம். ஆனால், தேவனுக்கோ அது ஒரு மாபெரும் பள்ளத்தாக்கு.

ஒருவேளை, உண்மை நிலை இப்படியாக இருந்தாலும், ஆவியானவர் தேவ ஞானம் பற்றி நாம் கொஞ்சமாகிலும் விளங்கிக் கொள்ளும்படியான சில கருத்துக்களை வேதாகமத்தின் பக்கங்களில் வெளிப்படுத்தியே கொடுத்துள்ளார். யோபு புத்தகத்தில் அவர் பூரண ஞானமுள்ளவர் என்று தெரிந்து கொள்ள முடியும் (யோபு 37:16). ஏசாயா தீர்க்கனை கொண்டு ஆவியானவர், பூமியின் கடையாந் தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது? (ஏசாயா 40:28) என்று வெளிப்படுத்தியுள்ளார்.

இப்படிப் பூரணமும், ஆராய்ந்து முடியாததுமான தேவ ஞானத்தை வெளிப்படுத்தும் வழிகளில் ஒன்றாக கிறிஸ்துவின் சிலுவை உள்ளது. எப்படியெனில், 1கொரி 2:20-ல் இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன் என்று சொல்லும் பவுலடியார் தொடர்ந்து கூறும் போது, அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலக தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம் என்று கூறுகிறார் (1கொரி 2:2-7). இப்பகுதியானது தேவ ஞானத்திற்கும் கிறிஸ்துவின் சிலுவைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குமான பந்தத்தை நமக்கு எடுத்து விளக்குகிறது.

இன்னும் இதே பவுலடியார், எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, தேவ ஞானத்தோடு கிறிஸ்துவின் சபையைத் தொடர்புபடுத்துவதையும் நாம் காணலாம். ".... உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாக இப்பொழுது தெரியவரும் பொருட்டாக..." என்று (எபே 3:10). ஆக, சிலுவையின் மூலம் நாம் தேவ ஞானத்தையும், சிலுவைக் கிறிஸ்து கட்டின ஒன்றான மெய்ச் சபையின் மூலம் நாம் தேவ ஞானத்தையும் அறிந்து கொள்ளுகிறோம்.

ஆக, தேவ ஞானம் நமக்கு வெளிப்படுத்தியிருக்கும் சிலுவையையும், சிலுவைக் கிறிஸ்து கட்டின சபையையும் நாம் அற்பமாக எண்ணாமல், சிலுவையின் உபதேசத்துக்கு நம்மை ஒப்புக் கொடுத்து, சிலுவைக் கிறிஸ்துவின் சபையில் நாம் அங்கமாக மாறுவோம்.

## II கிறிஸ்துவின் சிலுவையும், தேவ வல்லமையும்

கிறிஸ்துவின் சிலுவையிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற அடுத்த பாடம், பரலோக தேவனுடைய வல்லமை பற்றியது.

தேவனுடைய வல்லமை இந்த இடத்திலே தான் இருக்கிறதென்று நாம் சொல்ல முடியாதபடி, அது விண்ணிலும், மண்ணிலும் நீக்கமற நிறைந்து கிடக்கிறது. இந்த உண்மையைத்தான் தாவீது தனது சங்கீதங்களுள் ஒன்றில், வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங். 19:1) என்று எழுதி அவருடைய வல்லமையைப் பிரபலப்படுத்துகிறார். எரேமியா தீர்க்கன் இன்னும் சிறப்பாக, அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தை தமது ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார் (எரே 51:15) என்று கூறியுள்ளார். ஆம், தேவனுடைய வல்லமையை நாம் ஏதேன் தோட்டம் தொடங்கி, கிறிஸ்துவின் பிறப்பு (லூக் 1:35), கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (2கொரி 13:4), சபை ஸ்தாபிதம் (அப். 2). வருகை பற்றிய விவரிப்பு (1தெச 4:15-17) என்று எங்கும் காணலாம். அதைவிட, பரலோக மகிமை பற்றிய வர்ணணை தேவ வல்லமைக்கு எல்லையே இல்லை என்பதை நமக்கு உணர்த்துகிறது. இப்படிப்பட்ட தேவ வல்லமை கிறிஸ்துவின் சிலுவையிலும் நமக்குத் தெரியாமலில்லை.

பவுலடியார் கொரிந்தியர் முதலாம் நிருபத்தின் முதல் அதிகாரம் 18-ம் வசனத்தில், சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது என்று கூறுகிறார். தேவ பெலன் என்பதும், தேவ வல்லமை என்பதும் ஒன்றுதான். சிலுவையின் மூலம் நாம் பெற்றிருக்கிற உபதேசமாகிய சுவிசேஷம் தேவ வல்லமையை நமக்கு வெளிப்படுத்துகிறது. மேலும், பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதும் போது, கிறிஸ்துவின் சிலுவையை மூலாதாரமாகக் கொண்டு பெற்ற சுவிசேஷத்தை இப்படியாகக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது தேவ வல்லமையாயிருக்கிறது என்று. (ரோமர் 1:16) கிறிஸ்துவின் சிலுவையானது மனுக்குலத்துக்கு தேவ வல்லமையை இப்படியாக வெளிப்படுத்தியிருக்கிறது.

அருமையானவர்களே, தேவனுடைய வல்லமையினாலே சிலுவையின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிற சுவிசேஷத்தை நாம் நம்முடைய வாழ்க்கையில் எந்த இடத்தில் வைத்துள்ளோம்? சிலுவையின் சுவிசேஷம் போதிக்கும் இரட்சிப்பை (1 கொரி 1:18) நாம் நம்முடைய வாழ்க்கையில் பெற்றுவிட்டோமா? சிந்திப்போம். சிலுவையின் சுவிசேஷம் தரும் இரட்சிப்பை புதிய ஏற்பாடு சொல்லும் உபதேசத்தின்படி நாம் பெறாமல், சிலுவைக்கு என்னதான் முக்கியத்துவம் கொடுத்து

அதைக் கையிலும், கழுத்திலும், சுவற்றிலும் தொங்கவிட்டுக் கொண்டு,எப்படித்தான் சிலுவை பற்றி முறை வைத்துப் பாடிப் பிரசங்கித்தாலும் நாம் சிலுவைக்குப் பகைஞராகவே தேவனால் பார்க்கப்படுவோம் (பிலி. 3:18) என்பதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம்.

ஆகையால், நாம் சிலுவைக்கும், சிலுவை நமக்கு வெளிப் படுத்தும் தேவ வல்லமைக்கும் எதிரானவர்களாகக் காணப் படா மல், சிலுவையின் உபதேசத்துக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, சிலு வை கிறிஸ்துவுக்காக நம்மை ஒப்புக்கொடுத்து வாழ பரலோகத் தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக.

## III கிறிஸ்துவின் சிலுவையும், இரத்தத்தின் வல்லமையும்.

கிறிஸ்துவின் சிலுவையிடமிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தின் வல்லமை பற்றியது.

விஞ்ஞானத்தின் அளப்பரிய சாதனைகள் விண்ணை நோக் கிப் போய்க் கொண்டிருக்கும் இந்தக் காலத்திலும் ஓர் உண் மையை நாம் ஓங்கி அடித்துச் சொல்ல முடியும். அது, இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்திற்கு நிகரான வல்லமை வேறு எதற் கும் இல்லையென்று. பரிசுத்த ஆவியானவர், இப்பேருண்மையை யோவான் அப்போஸ்தலனுக்கு அப்பட்டமாக வெளிப்படுத்தி யுள்ளார். "…..அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் " என்று (1யோவா 1:7). கிறிஸ்துவின் இரத்தத்திற்கான இந்த வல் லமை வேறு எதற்கு உண்டு? அப்படி வேறு எதற்காகிலும் இருந் திருக்குமானால் பிதாவாகிய தேவன் தமது ஒரே பேறான குமா ரனை சிலுவைக்கு ஒப்புக்கொடுத்திருக்க வேண்டிய அவசியமே இல்லையே! அப்படித்தானே.

நம்முடைய பாவங்கள் கழுவப்படும்படியாய் கிறிஸ்து சிலு வையில் சிந்தின இரத்தத்தின் சிறப்பு குறித்து பரிசுத்த ஆவியா னவர் எப்படியெல்லாம் எடுத்துக் கூறுகிறார் என்று பாருங்கள். அது குற்றமில்லாதது (மத். 27:4) மாசற்றது மற்றும் விலையே றப் பெற்றது (1பேது 1:19). சுத்திகரிப்பதற்குப் போதுமானது (எபி 9:14). இறுதியானது (எபி. 9:26) மற்றும் வெற்றி கொள்ளக் கூடியது (வெளி. 12:11). இன்னும், இந்த இரத்தத்தின் மேன் மையை ஆவியானவரின் ஏவுதலால் பவுலடியார் கொலோசெ பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எடுத்துச் சொல்லும் நேர்த்தி யைக் கொஞ்சம் பாருங்களே. அவர் சிலுவையில் சிந்தின இரத் தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவை கள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கி கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று (கொலோ 1:16) என்று.

ஆம், பாவத்தின் பயங்கரத்தினாலே தேவனிடமிருந்து பிரிந்து போன (ஏசாயா 59:1,2) மனிதனைப் பாவத்திலிருந்து கழுவி மறுபடியும் தேவனோடு ஒப்புரவாக்கும் செயலைச் செய் யும் வல்லமை கிறிஸ்துவின் இரத்தத்திற்கு மாத்திரமே உண்டு.

அந்த இரத்தமானது, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத வலி, வேதனைகளுக்கு மத்தியில் சிலுவையில் சிந்தப்பட்டது. இப்படி சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தம் தான் மனிதனுக்கு தேவனோடிருந்த பகையைக் கொன்று (எபே 2:16) அவனுக்குச் சமாதானத்தைப் பெற்றுத் தந்தது. அப்படியானால், அன்பானவர்களே, நாம் ஒவ்வொருவரும் தேவனோடு சமாதானமாகி விட்டோமா? இயேசுவானவர் பாடுகளையும், அவமானத்தையும் சகித்துக் கொண்டு சிலுவையில் இரத்தம் சிந்தினதற்கான நோக்கம் நாம் தேவனோடு சமாதானமாக வேண்டுமென்பது தான். மற்றபடி, வருடத்தின் சில மாதங்களில் நாம் அவரை நினைத்து, அவருடைய பாடுகளைப் பெரிதாகப் பேச வேண்டுமென்பதற்காக அல்ல. அவருடைய பாடுகளை நினைக்கும் வாய்ப்பு தேவனுடைய பிள்ளைகளுக்குக் கர்த்தரின் பந்தியின் போது வாரந்தோறும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (1கொரி. 11:23-24)

தேவனோடு சமாதானமாவதற்கு நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அது எப்படி என்கிறீர்களா? கொஞ்சம் கவனமாக கவனியுங்கள். மத் 26:28-ம் வசனம் இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம் என்று கூறுகிறது. அப். 2:38;22:16 ஆகிய வசனங்கள், ஞானஸ்நானத்தினாலே பாவமன்னிப்பு என்று கூறுகிறது. அப்படியானால், ஒருவன் சிலுவையின் உபதேசப்படி ஞானஸ்நானம் பெறும் போது, கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்துகிறான் என்பது தெளிவாகிறது. அந்த இரத்தம் தான் ஒருவனுடைய பாவங்களைக் கழுவுகிறது. கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு நாம் முழுமையாகக் கீழ்ப்படியாமல், அதாவது, விசுவாசித்து (மாற் 11:16), மனந்திரும்பி (அப். 2: 38). இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (ரோம 10:9,10), பிறகு பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறாவிட்டால் (அப். 22:16) நாம் எத்தனை முறை தண்ணீரில் முழுகி எழுந்திருந்தாலும் அதினால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. நாம் இன்னும் கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளாதவர்களாகவே இருப்போம். இதில் குழப்பம் வேண்டாம். கிறிஸ்துவின் உபதேசம் இப்படித்தான் சொல்லுகிறது.

ஆகையால், அருமையானவர்களே, இங்கே கிறஸ்துவின் சிலுவை நமக்குக் கற்றுக் கொடுக்கும் இந்தப் பாடங்களை நாம் அப்படியே மனதில் ஏற்று, வருடத்தின் ஒரு சீசனுக்கு மாத்திரம் சிலுவைக் கிறிஸ்துவை நினைக்கிறவர்களாக இல்லாமல், எப்பொழுதும் கிறிஸ்துவை நினைத்து, கிறிஸ்துவுக்கும், அவருடைய சிலுவை போதனைகளுக்கும் உண்மையுள்ளவர்களாக நடந்து, கிறிஸ்து கட்டின ஒன்றான மெய்ச் சபையில் அங்கமாகி, பரலோக பாக்கியத்தை உறுதி செய்து கொள்வோம். ஆமென்!

**E.Z.S. இராஜநாயகம்**

# ஜெபம் பண்ணுவது எப்படி?

நீங்கள் ஒரு பிராந்திய சபை தொடங்கி, அங்கு ஆராதனை, வேதபாட வகுப்பு போன்றவற்றை செய்ய வேண்டுமெனில், ஜெபம் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும், அதை எப்படிச் செய்ய வேண்டுமென்பது பற்றியும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

முதலாவது, ஜெபம் என்றால் என்ன என்று விளக்குகிறோம். பரலோகத்திலிருக்கிற தகப்பனோடு நாம் பேசுவதற்கு நமக்குக் கிடைத்திருக்கும் ஒரு வழிமுறை தான் ஜெபமாகும். வேறு வகையாகச் சொன்னால், ஜெபம் என்பது, தேவனுடைய பிள்ளைகளுக்குக் கூட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதம் அல்லது சிலாக்கியமாகும். ஆனால், தேவனுடைய பிள்ளைகள் என்பவர்கள் யார்? தேவனுக்குக் கீழ்ப்படிந்து, இரட்சிப்படைந்து, கிறிஸ்தவர்களாக மாறினவர்கள். இன்னும், தேவனுடைய ஆவிக்குரிய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இருப்பவர்கள்.

நீங்கள் வேதாகமத்தைப் படித்துப் பார்த்தால், ஜெபமானது, தேவனுடைய மகன் அல்லது மகள் என்ற உறவில் சம்பந்தப்பட்டிருப்பவர்களுக்குத் தான் உரிமையாக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ளமுடியும். இரட்சிப்பைப் பெறாத பாவி அதாவது, தேவனுடைய பிள்ளை என்ற அந்தஸ்தைப் பெறாத ஒருவன் தன்னுடைய ஜெபம் கேட்கப்படும் என்ற எதிர்பார்ப்போடு தேவனை நோக்கி ஜெபிக்கும் தகுதியைப்பெற அவனால் முடியாது. இயேசுவால் சுகமாக்கப்பட்ட குருடன் இவ்விதம் சொல்லுகிறான். பாவிகளுக்குத் தேவன் செவிக்கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து, அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார் (யோவா 9:31) என்று.

இந்த மனிதன் ஓர் உண்மையை இங்கு வெளிப்படுத்துகிறான். இவன், பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று சொல்லும் போது, அதாவது அவர்களின் ஜெபத்தைக் கேட்பதில்லையென்று சொல்லும்போது, இதன் பொருள் தேவனுடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்து சத்தியத்தின்படி அவருடைய பிள்ளையாக மாறி, அவரை உண்மையாக ஆராதிக்கும்பொழுது, ஜெபத்தைக் கேட்கிறார் என்பதே, பேதுரு கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது. தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது என்று கூறியுள்ளார் (1பேதுரு 3:12) வெகு காலத்துக்கு முன்பு, ஏசாயா தீர்க்கனும் இவ்வாறே கூறியுள்ளார். இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்கு, அவருடைய கை குறுகிப்போகவும் இல்லை

கேட்கக் கூடாதபடிக்கு, அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. (ஏசா. 59:1,2).

நம்முடைய ஜெபம் தேவனால் கேட்கப்படுவதற்கு, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பது அவசியம் என்ற இவ்வுண்மையைப் புரிந்து கொள்ள ஒரு உதாரணம் தருகிறேன். ஓர் அரசாங்கத்தால் தன்னுடைய குடிமகனுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையை, சிலாக்கியத்தை அந்நாட்டைச் சேராத ஒருவன் பெற்றுக்கொள்ளும்படி வேண்டினால், எப்படியிருக்குமோ அது போல்தான் இதுவும். அவனுக்கு கிடைக்காது என்பது நமக்கு நன்றாகவே தெரியும். அதைப்போலவே தன்னுடைய பிள்ளைகளுக்குச் செவி கொடுப்பது போலவே மனந்திரும்பாத ஒரு பாவியின் ஜெபத்தையும் கேட்டு, அதற்கு தேவன் செவிகொடுப்பாரானால், அவருடைய பிள்ளைகளாக இராதவர்களைக் காட்டிலும், அவருடைய பிள்ளைகள் எந்த வகையில் சிறந்தவர்களாயிருக்க முடியும்? இரண்டு பேருக்கும் கண்டிப்பாக வித்தியாசம் உண்டு. இங்கே தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில், ஜெபம் என்னும் சிலாக்கியம் ஒருவனுக்குத் தேவையெனில் அவன் தேவனுடைய பிள்ளையாக மாற வேண்டும்.

வேதவசனங்களில் ஜெபம் பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆதிகிறிஸ்தவர்கள், அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப். 2:41) மேலும், பவுல் நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத் தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று கூறியுள்ளார் (பிலி. 4:6) இன்னும் யோவான் அப்போஸ்தலன் நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிக்கொடுக்கிறா ரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிக்கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவை களைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். (1யோவான் 5:14,15).

தனிப்பட்ட முறையிலும், சபையாகவும் சேர்ந்து ஜெபிக்க வேண்டுமென்பதை ஊக்கப்படுத்தும் அநேக வேத பகுதிகளை நாம் மேற்கோள் காட்டமுடியும். இருப்பினும் நாம் மனதிலே வைத்துக்கொள்வதற்கு சில குறிப்பான வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்து சீடர்களைப் பார்த்து நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப் படும்படியாக அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோவா 14:13,14)

என்றார். யோவான் 15:16-ல் நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார் என வாக்குக் கொடுப்பார் என வாக்குக் கொடுத்துள்ளார். மேலும், கிறிஸ்து நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (15:7) மேற்சொன்ன வசனங்களிலிருந்து ஒருவன் ஜெபிக்க முடியுமென்றும் அப்படி செய்யப்படும் ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு, சில நிபந்தனைகள் கொடுக்கப்பட்டிருப்பதையும் நாம் காண முடியும். இதை கர்த்தர் நமது சீடர்களுக்குச் சொல்லுகிறார் அல்லது அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குச் சொல்லுகிறார். அவரில் நிலைத்திருப்பவர்களுடனும், கிறிஸ்துவுக்குள்ளாகவோ அல்லது அவருடைய சபைக்குள்ளாகவோ இருப்பவர்களுடன் அவர் பேசுகிறார். இயேசு கிறிஸ்து நமக்காகப்பரிந்து பேசுகிறவராயிருக்கபடியால், நம்முடைய விண்ணப்பங்கள் அவருடைய நாமத்தினாலே இருக்க வேண்டும்.(1யோவான் 2:1) அத்துடன் 1யோவான் 5:14,15ல் நாம் பார்த்த ஜெபங்கள். அவருடைய சித்தத்தின்படியாக இருக்க வேண்டுவது அவசியம்.

ஜெபம் பற்றி இன்னும் சில காரியங்களை கர்த்தர் சொல்ல வேண்டியதாயிருந்தது. உதாரணமாக, அவர் சீடர்களைப் பார்த்து, அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது, மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலேயும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்த்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் செய் அப்பொழுது வெளியரங்கமாய் உனக்கு பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும் போது, அஞ்ஞானிகளைப்போல் வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள், அதிக வசனத்தினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும் மென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்களும் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் செய்ய வேண்டிக்கொள்கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவையென்று அவர் அறிந்திருக்கிறார். (மத். 6:5-8) மனுஷர் காணும்படியாகவும், பார்வைக்காகவும் ஜெபிக்கக்கூடாதென்று சொன்ன கர்த்தர், எப்படி ஜெபிக்க வேண்டுமென்றும் மாதிரியைக் காண்பித்தார். கிறிஸ்து, அப்படி மாதிரியாக சொல்லிக்கொடுத்ததை, அநேக பிரிவினைச் சபைகளால், கர்த்தருடைய ஜெபம் என்று வர்ணிக்கப்பட்டு, தாங்கள் கூடுகையில் திரும்பத் திரும்ப சொல்லப்படுகிறது. இது கர்த்தருடைய ஜெபம் அல்ல. ஆகவே, இதை தனியாகவோ, சபையாகவோ சொல்லக்கூடாது.

அப்படி திரும்பத் திரும்ப சொல்லப்படுமானால் அது மனுஷர் காணவேண்டுமென்றும், மனுஷரால் கேட்கப்படவேண்டுமென்றும், செய்யப்படுகிற வீண் வார்த்தைகளோடு கூடிய ஜெப

மாகிவிடும். கிறிஸ்துவானவர், எப்படி ஜெபிக்க வேண்டு மென்பதற்கு ஆதாரமாக இந்த ஜெபத்தை சொல்லிக்கொடுத்தார். அவ்வளவு தான். அந்த ஜெபத்தில் திரும்பத் திரும்ப சொல்வதற்கு விசேஷம் ஒன்றுமில்லை. இப்பொழுது, ஒரு சபையாகக் கூடி வரும்போது, கண்டிப்பாக அங்கு ஜெபம் இருக்க வேண்டும். கூடி வருகிறார்கள் தனியாகவும் ஜெபிக்கலாம், யாராவது ஒருவர் ஜெபத்தை நடத்த, கூட்டாகவும் ஜெபிக்கலாம். கூடி வருகையில் சகலமும் கிரமமாயும், நல்லொழுக்கமாயும் செய்யப்படவேண்டுமாகையில், ஆண் அங்கத்தினர்கள் அதற்கு முன்னமே அந்தக்கூடுகையில் எத்தனை ஜெபம் இருக்க வேண்டுமென்றும், யார் யார் அதைச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்க வேண்டும் அல்லது ஒரு பிராந்திய சபையில் ஒருவருக்கொருவர் அனுசரித்துப் போகும் நிலை இருக்குமானால், அந்த குறிப்பிட்ட கூடுகைக்கு பொறுப்பேற்றிருப்பவரோ அல்லது தலைமையேற்றிருப்பவரோ, கூடிவந்திருக்கிற ஆண் அங்கத்தினர்களில் ஒருவரை, ஜெபம் செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். ஒரு கூடுகையில் அல்லது ஆராதனையில் எத்தனை ஜெபங்கள் வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஜெபத்தில் வழி நடத்துபவர், முதலாவது கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல வேண்டும். சபையார்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய உதவியும், வழி நடத்துதலும் கிடைக்கும்படியாக ஜெபிக்கலாம். வியாதியஸ்தர்களுக்காகவும், விசேஷ தேவையாளருக்காகவும் ஜெபிக்கலாம். பாவ மன்னிப்புக்காகவும் ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கப்படுகின்ற எல்லா ஜெபங்களும் பரலோகத்தில் இருக்கிற பிதாவை நோக்கியிருக்க வேண்டும். அது மாத்திரமல்ல, இயேசுவின் நாமத்தில் இருக்க வேண்டும். அதாவது தேவனை நோக்கி ஆரம்பித்து, இயேசுவின் நாமத்தில் முடிக்கப்படவேண்டும். ஜெபிப்பவர் தெளிவாகவும், கூடிவந்திருக்கிற யாவரும் கேட்கிறவகையில் சத்தமாகவும் ஜெபிக்க வேண்டும். அப்பொழுதுதான் கேட்பவர்கள் அதை தங்களுடைய ஜெபமாகக் கருதி ஆமென் என்று சொல்ல முடியும்.

கூடி வந்திருக்கும் அங்கத்தினர்கள் உட்கார்ந்து கொண்டோ, நின்று கொண்டோ, முழங்காலிட்டோ அல்லது தங்களுக்கு சௌகரியமான, நிலையிலோ ஜெபிக்கலாம். ஆனால், எந்த நிலையாக இருந்தாலும் அது தேவனிடத்தில் உங்களது தாழ்மையையும், பயபக்தியையும் காட்டக் கூடியதாக இருக்கவேண்டும். இதை மறந்துவிடாதீர்கள். வேதாகமம் இது பற்றி தெளிவாகக் கூறுகிறது.

கர்த்தருடைய பந்தியின் போதும், பொருளாதார ரீதியாக கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக காணிக்கைக்கு முன்பாகவும் ஜெபிக்க வேண்டும். காணிக்கை கொடுக்கப்பட்டதற்குப் பின்பும் காணிக்கைக்காக ஜெபிக்கலாம்.

சபையாகக் கூடி வந்திருக்கும்போது, பெண்கள் ஜெபத்தில் வழி நடத்த அனுமதிக்கப்படவில்லை. இது குறித்து விபரமாக பின்னால் வரும் பாடத்தில் படிக்கலாம்.

**J.C. சோட்**

பெண்கள் பகுதி

# முதல் சகோதரிகள்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே, இம்மாதமும் நாம் அனைவரும் சேர்ந்து கர்த்தருடைய வேதத்திலிருந்து பாடங்களை கற்றுக் கொள்ள தேவன் கொடுத்த சிலாக்கியத்துக்கு அவருக்கு நன்றி சொல்லுவோம்.

பெண்களின் கீழ்ப்படிதல் பற்றி பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தின காரியங்களை (1 தீமோத்தேயு 2:9-15, 1 கொரி 14:34,35) ஆகிய வசனப் பகுதிகளில் காணலாம். *சபைகளில் ஸ்திரீகள் பேசாமல் இருக்க வேண்டும். பேசும்படிக்கு அவர் களுக்கு உத்தரவில்லை. ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே.* மேலும் 1 தீமோத் 2:9-15 வசனப் பகுதிகளை வாசிக்கும் போது அவர்கள் அலங்காரம் பற்றிப் பேசுகிறது. பெண்களின் அலங்காரத்திற்கான இலக்கணம் மிகத் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளது. வஸ்திரம் பற்றி கூறும் போது தகுதியான வஸ்திரம், தெளிந்த புத்தி, தேவ பக்தி, நற்கிரியைகள், அடக்கம், கற்றுக்கொள்ளும் மனப்பான்மை, அதிகாரம் செய்யாமல் பணிந்து போதல், எல்லாவற்றிற்கும் மேலாக அமைதல் போன்ற தேவன் எதிர்பார்க்கும் இலட்சணங்களாக பெண்களுக் கேயென்று வகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளது.

இருப்பினும், அன்பான தேவன், அவருக்கு சேவை செய்வதற்கென்று எண்ணி முடியாத சமய சந்தர்ப்பங்களை பெண்களுக் கென்று விசேஷமாக கொடுத்திருக்கிறார். அமைதலோடு, அதே சமயம் மிகவும் சிறப்பாகவும், வல்லமையோடும் காரியங்களை செய்யும் பொறுப்பை தேவன் கொடுத்திருக்கிறார். அன்பு, கருணை, இரக்கம், மன்னிப்பு ஆகிய நான்கும் கிறிஸ்தவத்தின் முகப்புச் செதுக்கான கொடைகளாகும். இவற்றை பேணி வளர்க்கக் கூடிய பொறுப்பை இயற்கையாகவே உள்ளூர ஒரு பெண் பெற்றிருப்பதால் தேவனால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் தான்.

பெஸ்தகொஸ்தே நாளில், யூதர்கள் பேதுருவின் வல்லமையான பிரசங்கத்திற்கு தங்களை கீழ்ப்படுத்தினதால் சபை ஸ்தாபிக்கப்பட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம். மிகவும் திடமான தலைமைப் பண்புகளை கொண்ட ஆண்களுடன், பேணிக்காக் கக்கூடிய குணாதிசயத்தை பெற்ற பெண்களும் சேர்ந்து ஊழியம் செய்ததினால், இயேசுவின் உபதேசத்தைக் கொண்டு உலகத்தையே தலைகீழாக மாற்ற முடிந்தது.

அப். நடபடிகளில் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவப் பெண்கள் பலபேர் உள்ளனர். இயேசுவின் தாயாகிய மரியாள், சப்பீராள், தொற்காள், அவளைச் சுற்றியிருந்த ஸ்திரீகள், யோவான் மாற்குவின் தாயாகிய மரியாள், ரோதை, ஐனிக்கேயாள், லீதியாள், பிரிஸ்கில்லாள், ராஜ ஸ்திரீயாகிய கந்தாகே, துருசில்லா பெர்னீக்கேயாள் போன்றவர்களின் பங்கு பற்றி வாசிக்கிறோம். இன்னும் பேர் சொல்லப்படாத பெண்களும் இடம் பெற்றுள்ளனர். கிரேக்க விதவைகள், துன்புறுத்தப்பட்ட ஸ்திரீகள் (சவுலால்)

பாடநுபவித்த ஸ்திரீகள், குறிசொல்லுகிற பெண், பிலிப்பின் குமாரத்திகள், கிறிஸ்தவ மனைவிமார்கள், பவுலின் சகோதரி என்று பெயர் குறிப்பிடாத பெண்களும் இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளனர்.

சபை சரித்திரத்தை உள்ளடக்கிய அப். நடபடிகளின் புத்தகத்தில் இத்தனை பெண்கள் தங்கள் பங்கை ஆற்றியிருக்கி றார்கள் என்பதை அறியவரும் போது மிகவும் ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் உள்ளது. கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரி களே, இன்றைய நாட்களில் வாழும் நாமும் கூட நம்முடைய பங்காக கர்த்தருக்காக எதையாகிலும் செய்தே ஆக வேண்டும்.

அப். நடபடிகளில் முதலாவது இடத்தைப் பெற்றிருக் கிற ஸ்திரீயாக இயேசுவின் தாயாகிய *மரியாள்* இருக்கிறார்கள். கர்த்தருக்கு சித்தமானால் "திருமறை ஆசான்" என்னும் நம் பத்திரிக்கையின் வாயிலாக ஒவ்வொரு மாதமும் இந்த ஸ்திரீகள் பற்றிய காரியங்களை வேதத்தின் துணையோடு கற்று, நாமும் அதிலிருந்து நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பிரயோஜனமான பாடங்களை கற்றுக் கொள்வோம்.

## இயேசுவின் தாயாகிய மரியாள் :

பெண்களாக, அதிலும் தாய்களாக இருக்கக்கூடிய நாம், இயேசுவின் மரணத்திற்கு முன்பும், பின்பும், இயேசுவின் உயிர்த்தெழுதலின் போதும் மரியாள் அனுபவித்த அந்த உணர்வு களின் அளவை கொஞ்சம் கற்பனை செய்து கொள்ள முடியும். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பிறகு மரியாளும், இயேசுவும் ஒன்றாக சேர்ந்து இருந்ததை பற்றிய ஆதாரம் வேதாகமத்தில் இல்லை. ஆனால் (1 கொரி 15:5-7) யோவான் சீஷனின் பாதுகாப்பில் இருந்தபடியால் (யோவான் 19:26,27) ஒரு வேளை மாம்சத்தில் இயேசுவை பார்த்திருக்க வாய்ப்பு இருந் திருக்கலாம். *அப். 1:14ல் .... ஸ்திரீகளோடும், இயேசுவின் தாயாகிய மரியாளோடும் அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார் கள்* என்று பார்க்கிறோம்.

## யார் இந்த மரியாள்?

சந்தேகத்திற்கிடமின்றி இவர்கள் இயேசுவின் தாய். புதிய ஏற்பாட்டிலே பல மரியாள்கள் இடம் பெற்றிருந்தாலும், இயேசு வின் தாயாகிய மரியாள் என்பதினாலே, இயேசுவை பின்பற்றின மற்ற மரியாள்களிலிருந்து இவர்களை பிரித்து காட்டுகிறது.

இவர்களைப் பற்றி நாம் என்ன அறிகிறோம்? பரிசுத்த மும், அன்புள்ள இதயமும் கொண்டிருந்ததால் தேவன் தன்னு டைய ஒரே பேறான குமாரன் சுமக்க இவரைத் தெரிந்திருந்தார். (லூக்கா 1:26-35). மேய்ப்பராலே சொல்லப்பட்ட காரியத்தை குறித்து யாவரும் ஆச்சிரியப்பட்டுக் கொண்டிருந்த வேளை யிலே, *மரியாளோ அந்த சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்தி லே வைத்து, சிந்தனை பண்ணினாள்.* (லூக்கா 2:19) தேவால யத்திலே சிமியோன் குழந்தையாகிய இயேசுவைக் குறித்து கூறிய வார்த்தைகளைக் கேட்டு மரியாளும், யோசேப்பும் ஆச்சர்யப் பட்டார்கள் (2:33)

மேலும் தன் ஊழிய நாட்களில் இயேசு செய்த அற்புதங்களையெல்லாம் அறிந்திருந்தார்கள். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அப்போஸ்தலரோடும், சீஷர்களோடும், விசுவாசமுள்ள மற்ற ஸ்திரீகளோடும், தன் குமாரரோடும் கூட இயேசுவோடு தன் நேரத்தை செலவழித்தார்கள். உயிர்த்தெழுதல் நடக்கும் வரைக்கும், சொல்லப்போனால் பெந்தேகொஸ்தே நாள் வரைக்கும், அவருடைய சீஷர்களில் அநேகரைப் போல தேவனுடைய *இராஜ்ஜியம்* பற்றிய ஆவிக்குரிய தன்மையை மரியாளும் புரிந்து கொள்ளவில்லை. இயேசு மேசியா என்றும், தேவனால் மனுக்குலத்துக்கு கிடைக்கப்பெற்ற ஓர் ஈவு என்றும் மரியாள் அறிந்திருந்தார்கள். ஆனால், அவருடைய நோக்கத்தின் விரிவாக்கம் அல்லது எந்த வகையிலே அந்த நோக்கத்தை ஸ்தாபிப்பார் என்பதை மரியாள் அறிந்திருக்கவில்லை. இயேசுவின் வாழ்க்கை, மரணம் இவைகளின் முக்கியம் பற்றி அறியவில்லையென்றா லும் அவர் மேல் அவருக்கு இருந்த அன்பையும், விசுவாசத்தை யும் அப்படியே காப்பாற்றி வைத்திருந்தார்கள்.

சரி. இந்த மரியாளிடமிருந்து நாம் என்ன பாடங்களை கற்றுக்கொள்கிறோம் என்பதை கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த மாதம் படிக்கலாம். ஆமென்.

**ரேச்சல் ராஜநாயகம்**

## *ஏலகிரி முகாமின் சிறப்பம்சங்கள்*

- **கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.**
- **தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.**
- **ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.**
- **பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.**
- **கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்ப வெப்பம்.**
- **வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித் தனி வகுப்புகள்.**
- **குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.**
- **பெண்களுக்கு தனி இடவசதி.**

வாலிபர் பகுதி

# சிலுவை சுமக்க ஆயத்தமா?

**பி**ரியமான வாலிப உள்ளங்களே! உங்களை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன், அதோடு உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். உலகம் முழுவதுமுள்ள இழந்து போனவர்களின் இரட்சிப்பு இயேசுவையையும், அவருடைய சிலுவையையும் மையமாக கொண்டுள்ளது. தேவத் திருமகனின் தியாகம் மனித இனத்தை கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக, தேவன் பக்கமாக இழுத்து வந்துள்ளது. உலகரட்சகராகிய இயேசு தன் சத்துருக்களால் சவுக்கால் அடிக்கப்பட்டு, போர்ச்சேவகரால் துன்புறுத்தப்பட்டு, பரியாசம் செய்யப்பட்டார். எதிரிகள் அவர் மீது உமிழ்ந்து, அதன்பிறகு மிகக்கொடூரமான முறையில் அந்தக்கோர சிலுவையில் அவரை கொலைச் செய்தனர். இயேசுவின் சிலுவை மரணத்தை மத்தேயு ஆசிரியர் இவ்விதமாகக் குறிப்பிட்டுள்ளார். " அவரை சிலுவையில் அறைந்த பின்பு அவர்கள் சீட்டுப்போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள், அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல்காத்துக் கொண்டிருந்தார்கள் " (மத்தேயு 27:35,36). இது, பழைய ஏற்பாட்டில் சங்கீதக்காரனாகிய தாவீது உரைத்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது (சங்கீதம் 22:18).

சில மணி நேரபாடுகளுக்குப் பிறகு இயேசு சிலுவையில் தன் ஜீவனை விட்டார். ஏசாயா 53 ஆம் அதிகாரத்தில் ஏசாயா தீர்க்கதரிசி இயேசுவின் பாடுகளை நேரில் பார்த்தது போலவே விவரித்திருக்கிறார். அதுவும், கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றி எழுதியிருக்கிறார். இந்த அதிகாரத்தை படிக்கும் போது நாம் மெய்யாகவே மெய்சிலிர்த்துப் போகிறோம். இந்த சிலுவை பாடுகளை அனுபவிக்க அவருக்கு என்ன அவசியம் ஏற்பட்டது? அவர் என்ன பாவம் செய்தார்? அவர் எந்த பாவத்தையும் செய்யவில்லை. ஆனால், என் பாவங்களுக்காகவும், உங்கள் பாவங்களுக்காகவும், இயேசு அந்த கோரக்குருசில் தன் குருதியைச் சிந்தினார். வாலிபர்களே, இந்த உலகத்தில் நமக்காக, நம்முடைய பாவங்களுக்காக யாராவது உயிரை விடுவார்களா? உயிரை விடா விட்டாலும் கூட பரவாயில்லை பாடுகளையாவது அனுபவிப்பார்களா? நிச்சயமாகவே அதற்கு யாரும் தயாராக இல்லை. ஆனால், இயேசு நமக்காக பாடுகளை அனுபவித்ததற்கும், சிலுவையில் மரித்ததற்கும் தூண்டுகோலாக அமைந்தது அவர் நம்மீது வைத்த அன்புதான். இப்போது, இந்த சிலுவை எவைகளை அடையாளப்படுத்துகிறது என்று நாம் பார்ப்போம்.

## I சிலுவை என்னும் அடையாளம் பாவத்தின் ஆழத்தைச்சுட்டி காட்டுகிறது.

கிறிஸ்துவைப் பற்றி மாபெரும் உண்மைகளை இந்த சிலுவை அடையாளப்படுத்துகிறது. முதலாவது, இந்த அடையாளம் பாவத்தின் ஆழத்தைச் சுட்டிக் காட்டுகிறது. பாவத்தின் விளைவை, சிதைந்து போன குடும்பங்களிலும், பயங்கர பகையுணர்விலும், ஒருவருடைய உரிமையை மற்றவர் பறித்துக் கொள்கிற கொடூரச் செயல்களிலும் நாம் காணலாம். ஆனால், இயேசுவின் சிலுவை மரணம் பாவத்தை அதன் உண்மைத்தன்மையோடு மனிதனுக்குக் காட்டும் தேவனின் மாபெரும் முயற்சியாகும். தேவ மைந்தனின் சிலுவை மரணத்திற்கு பாவமே காரணமாக அமைகிறது. பாவமே அறியாத இயேசுவை தேவன் நமக்காகப் பாவமாக்கினார் (IIகொரிந்தியர் 5:21). உங்கள் பாவங்களும், என் பாவங்களும் தான் கிறிஸ்துவை சிலுவையைத் தூக்க வைத்தது. பரலோகத்தின் பொக்கிஷமாகிய இயேசு இந்தப் பாழுலகத்திற்கு வந்து பாடுபட வேண்டும் என என்ன அவசியம் ஏற்பட்டது?. வாலிபர்களே! நாம் பாவம் செய்யத் தூண்டப்படும் போது அந்த சிலுவைக்காட்சியைப்பார்த்தால் இந்த பூலோகத்தில் நாம் அடைய முற்படுகின்ற பூலோக மேன்மை நஷ்டமென்று உணர ஆரம்பிப்போம். இதைக் குறித்து பவுல் கூறும் போது "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லோரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித்தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" (II கொரிந்தியர் 5:14,15). நமக்காக சிலுவையில் தன் ஜீவனை விட்ட கிறிஸ்துவுக்காக வாழ அவருடைய அன்பு நம்மை நெருக்கி ஏவ வேண்டும்.

## II சிலுவை என்னும் அடையாளம் இரக்கத்தின் அகலத்தை சுட்டிக்காட்டுகிறது

தேவனுடைய அளவு கடந்த இரக்கத்திற்கு கிறிஸ்துவின் சிலுவை ஓர் அடையாளமாக இருக்கிறது, அது இயேசு கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் வல்லமை எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்கிறது. தீமை தண்டிக்கப்பட வேண்டுமென நீதி துடிக்கிறது. ஆனால், கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக தேவன் மனிதனுக்கு இரக்கத்தை நீட்டிக்கொடுத்துள்ளார். ஒரு பாவி தன்னுடைய பாவத்திற்கு தண்டனையைப் பெற்றுக்கொள்வதற்கு பதிலாக, அவன் பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

கீழே சொல்லப்படும் சம்பவம், மேதியர், பெர்சியராலே கொடுக்கப்பட்டது. மேதியர், பெர்சியர் இவர்களின் சட்டங்கள் மாற்றத்தக்கதல்ல. அதுமாத்திரமல்ல, அவைகளின் தண்டனைகளுக்கும் யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது. அச்சட்டத்தில் கண்ணுக்கு கண்ணும், பல்லுக்கு பல்லும் கேட்கப்படும். ஒரு சமயம் ஓர் இளைஞன் தன்னைச் சேர்ந்த ஒருவனின் கண்களை கெடுத்துப்போட்டான். அவனுடைய குற்றத்திற்கு தண்டனையாக, அந்த இளைஞனின் கண்கள் பிடுங்கப்பட வேண்டுமென

சட்டம் சொல்லிற்று. அந்தக் குற்றவாளி, விசாரணைக்காக நீதிபதியின் முன்னால் கொண்டு வரப்பட்டான். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவனின் சொந்தத் தகப்பன் நீதிபதியாக இருக்க நேர்ந்து விட்டது. அங்கே நீதி மற்றும் இரக்கம் இவ்விரண்டின் முரண்பாடான அழுகையின் சத்தம் நீதிபதியின் செவிகளில் ஒலித்தது. அந்த நீதிபதி மகனை அதிகமாக நேசித்தான் கூடவே நாட்டின் சட்டத்தை யும் மதித்தான், அதே நேரத்தில் தவறு செய்தவன் யாராக இருந் தாலும் தண்டிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் உடையவனாகக் காணப்பட்டான். நீண்ட நேர யோசனைக்குப் பிறகு நீதிபதி தன் மகனைப்பார்த்து இவ்விதம் சொன்னான் " உன்னுடைய நீதிபதி என்ற முறையில், நீ அழித்த இரண்டுக் கண்களுக்கு பதிலாக உனது இரண்டு கண்கள் கொடுக்கப்பட வேண்டும் என்கின்ற சட்டத்தின் தண்டனையை நான் உனக்கு விதித்தாக வேண்டும். சட்டம் சொல்வதற்கு குறைவான தண்டனை யை உனக்கு நான் விதிக்க முடியாது. ஆனால், உன் தகப்பன் என்ற முறையில் நீதியை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டு என்னுடைய கண் களில் ஒன்றைத் தருகிறேன்" என்று சொன்னாராம், இது இரக்கத்தைப்பற்றிய ஒரு பாடமாக நமக்கு அமைகிறது. எனவே சிலுவையானது மனிதனுக்கான தேவ அன்பையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

## III சிலுவை என்னும் அடையாளம் இரட்சிப்பின் வல்லமையை சுட்டிக்காட்டுகிறது

மனிதனுடைய இரட்சிப்பின் வல்லமையை சிலுவை அடையாளப்படுத்துகிறது. " சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது" (1கொரி 1:18). கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக மனிதன் தேவனிடம் ஒப்புரவாகிறான். கிறிஸ்து சிலுவையில் மரிக்கவில்லையென்றால் இரட்சிப்பு என்பது எட்டாக்கனியாக, ஒரு கானல்நீராகத்தான் இருக்கும். நாம் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படவில்லையென்றால் நித்திய நரகத்தில் நம் நாட்களை கழிக்க வேண்டும். கொல்கொதாவில் தேவ குமாரன், தனது ஒரு கரத்தை பரலோகத்திற்குள்ளாக நீட்டி தேவனை பிடித்துக்கொண்டார். மற்றொரு கரத்தை உலகத்திற்கு நேராக நீட்டி மனிதனுடைய இருதயத்தை தொட்டுள்ளார். அதன் மூலம் சிலுவையில் தொங்கின கிறிஸ்து மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேண்டுமெனக் கேட்கிறார்.


இப்படி, நமக்காக சிலுவையில் மரித்து நம் இரட்சிப்பிற்கு வழிவகுத்த இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி; " ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்று சொல்லியிருக்கிறார் " (மத்தேயு 16:24). இங்கே சிலுவை என்பது பாடுகளைக் குறிக்கிறது, நமக்காக பாடுகள் பட்ட அருள் நாதராகிய இயேசுவுக்காக, அவருடைய தியாகத்திற்காக இந்த உலகத்தின் பாடுகளைப் பற்றி பதறாமல் பாடுகளை சுமந்து கொண்டு அவரைப் பின்பற்றுவோம், பரலோகம் சென்றடைவோம். அதற்கு கர்த்தர் தாமே உதவிச் செய்வாராக ஆமென்.

**பென்னி மார்ட்டின்**

# விதைக்கிறவன் உவமை

சிறுவர் பகுதி

கர்த்தரால் கிடைக்கப்பெற்ற அன்பார்ந்த சுதந்திரங்களே!!! இயேசு இரட்சகரின் நமத்தில் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். இம்மாதம் மூன்றாவது நிலமாகிய " முள்ளுள்ள இடத்தில் விதைக்கப்பட்ட விதை " பற்றி கற்றுக்கொள்வோம் சரியா?.



1. *முள் என்பது என்ன?*

   a. முள் என்பது பிரபஞ்சத்திற்குரிய கவலை, ஐசுவரியம், சிற்றின்பங்கள் இவைகளுக்கு அடையாளமாயிருக்கிறது.

   b. தேவனுடைய வார்த்தைகளுக்கு, இந்த முட்கள் என்ன பாதிப்பை ஏற்படுத்துகிறது?

   C. முட்கள் வளர்ந்து தேவனுடைய வார்த்தையை நசுக்கிப் போடுகிறது.

2. *அதினால் என்ன பாதிப்பு ஏற்படுகிறது?*
   ஆவிக்குரிய கனிகளுடன் கூடிய முதிர்ச்சியை அடைய விடாமல் தடுக்கிறது.

3. *ஒரு விவசாயி, தன் பயிர்களினூடே முட்களும் சேர்ந்து வளரும் போது என்ன செய்கிறார்?*

   a. களைந்து போடுகிறான்

   b. ஏன்?

   1. ஏனென்றால் தன்னுடைய பயிர்களை நெருக்கிப் போடுகிறது.

   2. தனக்குண்டான வருமானத்தையும், ஏன் அவன் வாழ்க்கையையே பாதித்து விடுகிறது.

4. ***நீங்களும், நானும் நம் இருதயத்தில் இப்படிப்பட்ட முட்கள் வளரும் போது என்ன செய்ய வேண்டும்?***

அவைகளை களைந்தெறிய வேண்டும்.

5. ***ஆவிக்குரிய முட்களாக இயேசு கிறிஸ்து எவைகளை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்?***

கவலை, ஐசுவரியம், சிற்றின்பம்

6. இவைகளை நாம் வளர விடுவோமானால் அவைகள் நம் இருதயத்தில் உள்ள தேவனுடைய வார்த்தைகளை நெருக்கிப் போடும்.

"உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவரிடத்தில் பிதாவின் அன்பில்லை" (1யோவான் 2:15)

மத்தேயு 13:22ல் இயேசு கிறிஸ்து ஐசுவரியத்தின் மயக்கம் என்று சொல்லுகிறார்.

7. ***நீங்களும், நானும் இந்த முட்களை எப்படிக் களைந்தெறிவது?***
நீதியையும், தேவ பக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்தகுணத்தையும் அறியும்படி நாடுவோமானால் ஐசுவரியத்தை விட்டு ஓடிவிடமுடியும் (1தீமோ 6:11,12).

என்ன தம்பி, தங்கைகளே இச்சிறுவயது முதற்கொண்டே இருதயத்தில் ஐசுவரியம், சிற்றின்பம், கவலை போன்ற முட்களை வளரவிடாமல் தேவனுடைய வசனத்தை மாத்திரம் வளரவிட்டு நல்ல கனிகளை கொடுக்க முயற்சி செய்வீர்களா? நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆமென்.

**மனப்பாட வசனம்**
மத்தேயு : 6:33

**R. ஏபில் ரோஜர் நாயகம்**

## நாளும், நடப்பும்

1. மாநிலங்களவையில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டது.
2. சென்னையில் புதிய சட்டப்பேரவைக் கட்டிடத்தை பிரதமர் மன்மோகன்சிங் திறந்து வைத்தார்.
3. உத்தரப்பிரதேச ஆஸ்ரமத்தில் நெரிசலில் சிக்கி 63 பேர் பலி
4. சென்னை காங்கிரஸ் தலைமையகமான சத்திய மூர்த்தி பவனுக்கு சோனியா காந்தி முதல் முறையாகச் சென்று தொண்டர்களுக்கு இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்.
5. பென்னாகரம் இடைத்தேர்தல் அரசியல் கட்சிகளுக்கு சவாலாக அமைந்துள்ளது.
6. தேர்வு காலங்களில் நடத்தப்படும் ஐ.பில் கிரிக்கெட் போட்டிகள் அவசியமா என்ற கேள்வி எழுந்து வருகிறது.

# நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால்...

- நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன் - பாவங்கள் முற்றிலும் மன்னிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 5:1)
- நான் இனி பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடிக்கு கிறிஸ்துவுடன் கூட மரித்திருக்கிறேன் (ரோம 6:6)
- நான் ஆக்கினைக்கு நீங்கலாயிருக்கிறேன் (ரோம 8:1)
- நான் தேவ செயலின்படியாக இயேசுவுக்குட்பட்டிருக்கிறேன் (1 கொரி 1:30)
- தேவனால் எனக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு, தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியைப் பெற்றிருக்கிறேன் (1 கொரி 2:12)
- கிறிஸ்துவின் சிந்தை எனக்கு உண்டாயிருக்கிறது.(1 கொரி 2:16)
- நான் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறேன். நான் என்னுடையவனல்ல. நான் தேவனுக்குச் சொந்தமானவன். (1 கொரி 6:19, 20)
- நான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் முத்திரையிடப்பட்டிருக்கிறேன். ஆவியானவர் என்னுடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார். (எபே 1:13,14)
- நான் மரித்திருக்கிறபடியால், நான் இனி எனக்காக வாழாமல், எனக்காக மரித்தவருக்கென்று பிழைத்திருக்கிறேன் (1 கொரி 5:14,15)
- கிறிஸ்துவுடனே சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். (கலா. 2:20)
- நான் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன். (எபே 1:3)
- நான் அவருக்கு முன்பாகப் பரிசுத்தமுள்ளவனும், குற்றமற்றவனாகவும் இருக்கும்படியாக உலகத்தோற்றத்துக்கு முன்னே தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறேன் (எபே 1:4)
- நான் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறேன் (எபே 2:5)
- நான் ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியம் பெற்றிருக்கிறேன். (எபே 2:16)
- இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, அதன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறேன். (கொலொ. 1:13)

- நான் மீட்கப்பட்டிருக்கிறேன். என் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கிறது (கொலா 1:14)
- கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக எனக்குள் இருக்கிறார் (கொலொ 1:27).
- நான் ஆவிக்குரிய ரீதியில் விருத்தசேதனம் பண்ணப்பட்டிருக்கிறேன். என்னுடைய பாவ சரீரம் களைந்து போடப்பட்டிருக்கிறது (கொலோ 2:11).
- நான் கிறிஸ்துவுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டு, எழுப்பப்பட்டு, கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறேன் (கொலோ 2:12,13).
- நான் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைப் பெற்றிருக்கிறேன். (2 தீமோ 1:7).
- நான் எனது நீதியின் கிரியைகளின்படி இரட்சிக்கப்படாமல் அவருடைய இரக்கத்தின்படி இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் (தீத்து. 3:5)
- நான் இரக்கத்தைப் பெறவும், கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டை சேரும் உரிமை பெற்றிருக்கிறேன் (எபி. 4:16).
- நான் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகும்படி மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (II பேது. 1:4).

**EZSR** **JAMES ORINDA**

## கிறிஸ்துவின் சபை

- வேதாகமம் மாத்திரம் அதன் ஒரே வழிகாட்டி [ரோம. 1:16; 1தெச 2:13]
- இது வேதாகம பெயரைத் தரித்திருக்கிறது. [ரோமர் 16:16]
- இது சரியான இடத்தில் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது [ஏசாயா. 2:2,3, அப். 2]
- இது சரியான காலத்தில் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது [யோவா 2:28-32; அப். 2]
- இது சரியான அஸ்திபாரத்தின் மீது தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது [மத். 16:18; அப். 2:36]
- இரட்சிகக்கப்பட்டவர்கள் இதில் இருக்கிறார்கள் [எபே. 5:23; அப். 2:47]
- இதன் அங்கத்தினர்கள் பரலோகத்தில் பெயரெழுதப்பட்டிருக்கிறார்கள். [எபி. 12:23]
- இதில் ஞானஸ்நானம் உட்பட, தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அங்கமாக முடியும் [அப். 2:41-47; 1 கொரி. 12:13]

# " துருவின் சாட்சி " நூலில் இருந்து

## பாடம் - 2

## வேதாகமம் கொடுத்தலைப் பற்றிய புத்தகம்

### நோக்கம்

பரிசுத்த வேதாகமம், விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கை செய்தல் ஞானஸ்நானம், கர்த்தரின் பந்தி மற்றும் சபை ஆளுகை அமைப்பு பற்றி பேசுவதைக் காட்டிலும் அதிகமாக கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி பேசுகிறது என்ற உண்மையை ஏற்ணறுக் கொள்ளச் செய்வது.

### உங்கள் சிந்தனைக்கு

பரிசுத்த வேதாகமம், விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கை செய்தல் ஞானஸ்நானம், கர்த்தரின் பந்தி மற்றும் சபை ஆளுகை அமைப்பு பற்றி பேசுவதைக் காட்டிலும் அதிகமாக கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி பேசுகிறது என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்வது.

### முன்னுரை

மத்தேயு நற்செய்தி நூலில், கொடுத்தல் பற்றி முப்பத்தி மூன்று முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாற்கு நூலில், கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி இருபது முறையும், லூக்கா நூலில், ஐம்பத்து மூன்று முறையும், யோவான் நூலில் கொடுத்தல் பதினேழு முறையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கொடுத்தல் பற்றி திரும்ப திரும்ப விவாதிக்கப்படாத நூல் புதிய ஏற்பாட்டில் எதுவும் இல்லை. ஓர் அதிகாரம் கொண்ட நான்கு புத்தகங்களிலும் கூட கொடுத்தல் பற்றி சொல்லப்பட்டுள்ளது. அந்த நூல்கள் பிலேமோன், 2யோவான், 3 யோவான் மற்றும் யூதா ஆகியவை. பரிசுத்த வேதாகமம் வேறு எந்த ஒரு காரியத்தைக் காட்டிலும் கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றி அதிகமாகப் பேசுகிறது.

சில வருடங்களுக்கு முன்பு வரை, மற்ற எந்த பாடத்தையும் விட, கர்த்தருக்குக் கொடுத்தல் பாடம் குறித்து நாம் குறைவாகவே பிரசங்கம் செய்திருக்கிறோம். பதிப்பாசிரியனாகிய எனக்குத் தெரிந்தவரை, நமது தமிழ் மொழியில், கர்த்தருக்குக் கொடுத்தலின் அவசியம் மற்றும் ஆசீர்வாதம் பற்றி உருப்படியாக எந்த ஒரு புத்தகமும் வெளிவரவில்லை.

நாம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஞானஸ்நானம் பற்றி பேசுகிறது போல காணிக்கைப் பற்றி அதிகமாக பேசியிருந்தால் பொருளாதாரத்தில் இந்தியத் திருச்சபைகள் தன்னிறைவடைந்து, பிறரிடம் இன்னும் கையேந்தும் நிலை மாறி இந்தியாவின், ஏன் உலகின் மற்ற பகுதிகளுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் சென்றி

ருக்கலாம். ஒவ்வொரு மாநிலத்திலும் கிறிஸ்துவக் கல்லூரிகளை நாமாகவே அமைத்திருக்கலாம். நம்மிடம் உண்மை சத்தியம் இருக்கிறது, நம்முடைய பணத்தையும், பலத்தையும் சத்தியத்தை எடுத்துச் செல்ல நாம் பயன்படுத்துவதில்லை. இப்போதாகிலும் இந்த உணர்வுக்கு நாம் வந்து கொண்டிருப்பதற்காக தேவனுக்கு நன்றி.

## I காயீனும், ஆபேலும்

சிலநாள் சென்ற பின்பு காயீன் நிலத்தின் கனியை கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான். ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமை யானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான். காயீனையும், அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அப்பொ ழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது (ஆதி 4:3-5).

சகோ. ஆடம் கிளார்க் (Adam Clark) அவர்கள், ஆபேல் நன்றி பலியை யும் அத்தோடு கூட மந்தையின் தலையீற்றுகளையும் கொண்டு வந்தான். இதனால், ஆபேல் தன்னை ஒரு பாவியாக ஒத்துக் கொண்டான் என்றும், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவினிடத்தில் தனக்கு இருந்த நம்பிக்கையை வெளிப்ப டையாக அறிவித்தான் என்றும் கூறுகிறார். இது குறித்துதான் அப்போஸ்தலர் இப்படியாகச் சொன்னது போல் தெரிகிறது. "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மை யான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான். அவனுடைய காணிக்கை களைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான் " (எபி. 11:4).

விசுவாசத்தினாலே ஆபேல் சிறப்பான அல்லது ஒரு பெரிய பலியைச் செலுத்தினான் என்பது, ஆபேல் தன்னுடைய நன்றி பலி யோடு கூட தன்னுடைய பாவங்களுக்காக அடிக்கப்பட ஒரு பலி கடாவையும் கொண்டு வந்தது போல் தான் தெரிகிறது. ஏனென் றால், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டியை அடையாளப்படுத்துவதற்காக அவன் மந்தையின் தலையீற்றை தெரிந்து கொண்டான். ஆபேலின் காணிக்கையைக் குறித்து " தேவனே சாட்சி கொடுத்தார் என்பது", ஆபேல் ஒன் றிற்கு மேலாக ஏதோ ஒன்றைக் கொண்டு வந்தான் என்பதை யே காட்டுகிறது. இது உண்மையானால், காயீன் போதுமான அளவு கொண்டு வராதபடியினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டான். "விசுவாசத்தினாலே" ஆபேல் தேவனுக்கு பலி செலுத் தினான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது விசுவாச மானது, கீழ்ப்படிதலோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. இது முன்ன தாகவே கட்டளை பெற்றிருக்கிறது என்று மறைமுகமாகப் பொருள்படுகிறது. நியாயப்பிரமாணம் இல்லையென்றால் அங்கே மீறுதலும் இல்லை. தேவன் அவர்களிடம் என்ன கொண்டு வரவேண்டும், எவ்வளவு கொண்டு வர வேண்டும் என சொல்லி யிருக்கவில்லையானால், காயீன் அங்கே எந்தத் தவறும் செய்ய வில்லை. ஆனால், காயீன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்

பட்டான் என்பது அவன் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை என்பதையே காட்டுகிறது. அவன் தேவனுடைய பிரமாணத்தை மீறி விட்டான்.

எபி. 11:4 ஆபேல், " மேன்மையான பலியை " தேவனுக்குச் செலுத்தினான் என்று சொல்கிறது. தேயர் (Thayer) அவர்களின் கிரேக்க அகராதியின்படி, " மேன்மையானது " என்பது, "அளவில் அதிகமானதும் ", "தரத்தில் அதிகமானது" என்று பொருள்படும். "மேன்மையானது" என்ற கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் "அதிகமானது", "அதைவிட அதிகமானது", "அதைவிட பெரியது", "அதிகமான பங்கு" என்கின்ற பொருள்களுடன் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. எந்த ஒரு நேர்மையான மனிதனும், இந்த வசனங்களைப் படித்து, காயீன் போதுமான பலி செலுத்தாதபடியால் தான், தேவன் அவனுடைய பலியை அங்கீகரிக்கவில்லை என்று சொல்ல முடியாது. சிலர், காயீன் மிருக பலியை செலுத்தவில்லை, எனவே, தேவன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லு வார்கள். அதைத் தான் நானும் சொல்கிறேன். காயீன் போதுமான அளவு பலி செலுத்தவில்லை. இந்த உண்மையைப் புரிந்து கொள்வதற்கு யாரெல்லாம் சிரமப்படுகிறார்களோ அவர்கள், ஜனங்கள் கொடுக்க வேண்டிய அளவு கொடுக்காமல் இருக்கும் போது தேவன் அவர்களைத் தண்டிக்கிறார் என்பதை ஏற்க மறுக்கும் கஞ்சத்தனமான சபை அங்கத்தினர்களே. காயீன் காணிக்கையை தேவன் ஏன் நிராகரித்தார் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையெனில், அப். 2:38ஐ என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பவனிடம் நீங்கள் குறை காண வேண்டாம். அங்கே இரண்டு பேருமே தவறுதான். ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறார். மற்றவர் கர்த்தருக்குக் கொடுப்பதிலிருந்து தப்பிக்க முடியற்சிக்கிறார் அவ்வளவுதான்.

**II ஆபிரகாம் கொடுத்தல்**

"அவனை ஆசீர்வதித்து, வானத்தையும், பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வதாம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக. உன் சத்துக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். சோதோமின் ராஜா ஆபிரகாமை நோக்கி, ஜனங்களை எனக்குத்தாரும், பொருள்களை நீர் எடுத்துக் கொள்ளும்" என்றான். (ஆதி. 14:19-21).

ஆபிரகாம், ராஜாவிடமிருந்து எடுத்து வந்த எல்லாப் பொருள்களிலும் பத்தில் ஒரு பங்கை எடுத்து உன்னதமான தேவனுக்கு காணிக்கையாகச் செலுத்தினான். இது நியாயப்பிர மாணம் கொடுக்கப்படுவதற்கு குறைந்தது 500 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதிலிருந்து தசம பாகம் கொடுப்பது மோசேயின் பிரமாணத்திலிருந்தோ அல்லது யாக்கோபிலிருந்தோ சிலர் சொல்லுகிறது போல தொடங்கப்படவில்லை.

(தொடரும்)

# ஆச்சரியமான தேவன்

தேவன் ஆச்சரியமானவர். அவர் உலகம் முழுவதிற்கும் தேவனாயிருக்கிறார், அவர் காலங்களைக் கடந்தவர், அவர் நம்மால் கட்டுப்படுத்தமுடியாதவர், அவருக்கு எல்லையே இல்லை. நித்திய சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகராகிய தேவன் ஏசாயாவைப் பார்த்து இப்படியாகக் கேட்கிறார் "இப்படியிருக்க, என்னை யாருக்கும் ஒப்பிடுவீர்கள்? எனக்கு யாரை நிகராக்குவீர்கள்? உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்; அவைகளை சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இயக்கத் திட்டமாகப் புறப்படப்பண்ணி, அவைகளையெல்லாம் பேர் பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது, பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது " (ஏசாயா 40:25,26,28).

தேவனும் ஒரு மனிதனைப்போல கவலையுள்ள, பயமுள்ள, நிச்சயமற்றவராக இருந்தால் உண்மையிலேயே இந்த உலகம் பயமுறுத்தக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கும். ஆனால், தேவன், தான் மனுஷனல்ல, தேவனாயிருப்பதாக தம்மை வெளிப்படுத்தி இருக்கிறார் (ஓசியா 11:9). தேவன் உயரமும், உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார் (ஏசாயா 6:1). முடிவில்லாத நித்திய, மாறாத தேவன் தான் சிருஷ்டித்தவைகளிலிருந்து என்றென்றும் வேறுபட்டிருக்கிறார்.

தேவனைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையும், தியானமும் தான் மனிதனுடைய உயரிய ஆசையாயிருக்கிறது. தெய்வீகத்தன்மை என்கிற மிகப்பெரிய பாடத்தை மனிதன் தொடர்ந்து படித்துக் கொண்டும், ஆராய்ந்து கொண்டும் தான் இருக்கிறான். தேவன் ஆச்சரியமானவராக இருக்கிறபடியால், அவரைப்பற்றிய ஒவ்வொன்றும் அவருடைய தன்மையை விவரிக்கிறது. நாம் இப்போது தேவனுடைய ஆச்சரியமான காரியங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

### தேவனுடைய ஆச்சரியமான குமாரன்

கிறிஸ்து ஒப்பிடமுடியாதவர். மத்தேயு 16:16ல் பேதுரு பண்ணின அறிக்கை நிச்சயமானதும், பகிரங்கமானதுமாகும். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக; நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனா

கிய கிறிஸ்து என்றான். புத்தரையோ, முகமது நபியையோ கன் பூசியசையோ பார்த்து ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று அழைக்க முடியாது. வேதாகமத்தில் மோசே, எலியா, யோவான் போன்றோர் கூட இப்படியாக அழைக்கப்படுவதற்கு பாத்திரர் அல்ல. நசரேயனாகிய இயேசுவைத்தவிர இந்த அறிக்கை வேறு யாருக்காவது பொருந்துமானால் அது மாயையிலும், மாயையா யிருக்கும்!.

ஆச்சரியமான இயேசு கிறிஸ்து ஒரு புத்தகம் கூட எழுதின தில்லை. ஆனால், அவரை பற்றி எழுதப்பட்டிருக்கிற புத்தகங் களை ஒன்று சேர்த்தால், உலகின் எல்லா நூலகங்களிலும் உள்ள ஒட்டுமொத்த நூல்களை விட அதிகமாக இருக்கும். அவர் ஓர் பாடல் கூட எழுதினதில்லை, ஆனால், உலகத்திலுள்ள எல்லா பாடல் ஆசிரியர்களும் பாட்டெழுத கருப்பொருளை அவர் அளித் திருக்கிறார். அவர் மருத்துவம் படிக்கவில்லை, ஆனால், உடைந்த உடல்களை சுகப்படுத்திய மருத்துவர்களை விட அவர் அநேக உடைந்த உள்ளங்களை சுகப்படுத்தியிருக்கிறார்.

வான சாஸ்திரத்தில் அவர் ஒரு நட்சத்திரம், பூகோளவிய லில் அவர் ஒரு பாறை, விலங்கியலில் அவர் ஓர் ஆட்டுக்குட்டி மற்றும் சிங்கம். பிணக்கத்தை இணக்கமாக்குபவர், எல்லா நோய் களையும் சுகப்படுத்துகிறவர். மாபெரும் மனிதர்களெல்லாம் மண் ணில் வந்து போயிருக்கிறார்கள். ஆனால், இயேசு இன்னும் ஜீவிக் கிறார். ஏரோதுவால் அவரைக்கொல்ல முடியவில்லை. சாத்தா னால் அவரை வசீகரிக்க முடியவில்லை; மரணத்தால் அவரை அழிக்க முடியவில்லை; கல்லறையால் அவரை தாங்க முடிய வில்லை. அவரே என்றென்றும் பூரணமானவர்.

ஒரு முறை ஒரு பிரசங்கியார் இப்படியாகச் சொன்னார் இயேசு மாத்திரமே ஈடுஇணையற்ற ஒருவர் அவருக்கு ஒப்பான வர் எவருமில்லை என்று.

தேவனுடைய குமாரனின் ஈடுஇணையற்ற ஜீவியத்தை எப் போதும் தனக்கு முன்பாக வைத்திருக்கும் எந்த ஒரு மனிதனும் செழித்திருப்பான். அவருடைய வாழ்க்கையை உங்கள் வாழ்க் கையோடு வைத்துப் பார்க்கும் போது வாழ்க்கையானது தெளி வானதாகவும், அறிவுப்பூர்வமானதுமாகிறது. கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கி றேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கி றார் என்று பவுல் சொன்னபோது அவர் காரியங்களை சரியான பார்வையில் பார்த்திருக்கிறார் (கலாத்தியர் 2:20).

**தேவனுடைய ஆச்சரியமான புத்தகம் :**

பல நூற்றாண்டுகளாக சந்தேகப்பேர்வழிகளின் சுத்தியலடி யைத் தாங்குவதற்கு தேவனிடத்திலிருந்து வந்ததும், பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டதும், தெய்வீக பராமரிப்பில் பாதுகாக்கப் பட்டதுமான வேத புத்தகத்தால் தான் முடியும். மனிதர்களால் அடிக்கடி நியாயந்தீர்க்கப்படுகிற வேதாகமம் அதற்கு மாறாக

எல்லா மனிதர்களையும் கடைசி நாளில் நியாயந்தீர்க்கக் கூடியதாயிருக்கிறது (யோவான் 12:48). அது அழிக்க முடியாதது (மத்தேயு 24:35), அது மாறாதது (சங்கீதம் 119:89) அது விசுவாசத்தை மனதிற்குள் புகுத்துகிறது (யோவான் 20:30,31), தவறை வெளியரங்கப்படுத்துகிறது (2தீமோத்தேயு 2).

வேதாகம் மனிதனுடைய வழிகாட்டியாக இருந்துகொண்டு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று போதிக்கிறது (தீத்து 2:11,12; ரோமர் 12:1,2). இந்த புத்தகம் அதன் ஆசிரியரைப் போலவே அசட்டைப்பண்ணப்பட்டது, புறக்கணிக்கப்பட்டது. ஆயினும், மனிதன் தனக்கு ஆபத்துண்டாகும்படிக்கே வேதாகமத்தை நிராகரிக்கிறான். நீதிமொழிகள் 13:13 இப்படியாகச் சொல்கிறது. திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்; கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான். நாம் வேதாகமத்தின் மீது எப்படிப்பட்ட மனப்பான்மையை கொண்டிருக்கி றோமோ அப்படித்தான் பரலோகமும் நம்மீதான மனப்பான்மையை கொண்டிருக்கும். தேவனுடைய ஆச்சரியமான புத்தகமான வேதாகமத்தை விட மதிப்பிலும், வல்லமையிலும் எந்த புத்தகமும் மிஞ்ச முடியாது.

### தேவனுடைய ஆச்சரியமான சபை

சபையைவிட பெரிய அல்லது உயர்ந்த அமைப்பு எதுவுமே இல்லை. இந்த சபைக்காகத்தான் இயேசு தன்னுடைய ஜீவனையே விட்டார். கர்த்தருடைய சபையானது தேவனால் வடிவமைக்கப் பட்டது (எபேசியர் 3:9,10; கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப் பட்டது. (அப். 2:47; 20:28) பரலோகத்திற்கு செல்லக் கூடியதாக இருக்கிறது (1தெசலோனிக்கேயர் 4:16,17) அதற்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார் (எபேசியர் 1:22,23); வேதாகமம் அதற்கு வழிகாட்டியாக இருக்கிறது (2பேதுரு 1:21); இந்த சபையினால் தேவன் தொழுதுகொள்ளப்படுகிறார், போற்றப்படுகிறார் (யோவான் 4:24; எபேசியர் 3:20,21).

இது சுவிசேஷ சபையாயிருக்கிறது (1 கொரிந்தியர் 15:1-4); இது மக்களுடைய சபையாயிருக்கிறது (அப். 10:34,35; யோவான் 6:37; இது கீழ்ப்படிகின்ற சபையாயிருக்கிறது (அப். 2:42; இது ஜெபிக்கின்ற சபையாயிருக்கிறது (1தெசலோனிக்கேயர் 5:17); இது ஒற்றுமையான சபையாயிருக்கிறது (அப். 2:44; 4:32) இது சுவிஷேசத்தை அறிவிக்கின்ற சபையாயிருக்கிறது (அப். 8:4), இது வெற்றியுள்ள சபையாயிருக்கிறது (மத்தேயு 16:18).

இந்த மகிமையான ராஜ்யத்தின் அற்புதத்தன்மை இதற்கு மேலும் மேம்பட முடியாது. தேவனுடைய சபையில் அங்கத்தினராக எல்லோருக்கும் சந்தோஷமான நம்பிக்கை இருக்கிறது.

### தேவனுடைய ஆச்சரியமான கிருபை

கிருபையிலிருந்துதான் இரட்சிப்பு ஊற்றெடுத்து வருகிறது. கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்கின்ற மகிழ்ச்சியான அறிவிப்பை எபேசியர் 2:8,9 வசனங்கள் சுமந்து வருகின்றன. மனித இனம் தன்னுடைய பாவத்தின் காரணமாக

நரகத்திற்கு தகுதியாயிருந்த போது தேவன் தன்னுடைய அந்தஸ்தை விட்டுக் கொடுத்து, தம்மை தாழ்த்தி விலையேறப் பெற்ற தம்முடைய குமாரனை மதிப்பில்லாத நமக்காக மரிக்கும்படியாக அனுப்பிக்கொடுத்தார். நாம் பாவிகளாயிருந்தபோது கிறிஸ்து நமக்காக மரித்தார் (ரோமர் 5:8). யோக்கியமில்லாத, தகுதியில்லாத மனிதனுக்கு தகுதியுள்ள தேவனால் ஈவாக இரட்சிப்பு கொடுக்கப்படுகிறபடியால் மனிதன் இந்த ஒளிமயமான தேவனுடைய இரட்சிப்பின் அழைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். கொரிந்து பட்டணத்து மக்கள் பாலியல் சம்மந்தமான காரியங்களிலும், ஒழுக்கக்கேட்டிலும் ஊறிப்போனவர்கள், அவர்கள் நிந்தைக்கும், அவமானத்திற்கும் அப்பாற்பட்ட காரியங்களை செய்து வந்தவர்கள். ஆயினும் தேவனுடைய கிருபையால் தங்கள் வாழ்க்கை முறையிலிருந்து கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டார்கள். (1 கொரிந்தியர் 6:9-11). ஒரு காலகட்டத்தில் மண்ணில் மதிப்பற்றவர்களாக இருந்தவர்கள் கேள்விப்படுதல், விசுவாசித்தல், மனந்திரும்புதல், அறிக்கை செய்தல், ஞானஸ்நானம் பெறுதல் போன்றவைகளினால் தேவனுடைய கிருபையின் அழைப்பை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட்டார்கள் (அப். 18:8).

தாழ்மையுடனும், சந்தோஷத்துடனும் தேவனுடைய ஆச்சரியமான குமாரன், புத்தகம், சபை மற்றும் கிருபையைப்பற்றி நாம் அறிந்து கொள்கிறோம். தேவன் எவ்வளவு பெரியவர்; ஆச்சரியமான தேவன்; அவர் நம் தேவனாயிருக்கிறார்!


## திருமறை ஆசான் இதழ் உரிமை பற்றிய அறிக்கை

## திங்களிதழ் விதிப்படிவம்

## Form - IV

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | 86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. |
| அச்சிடுவோர் பெயரும் முகவரியும் | : | சன் ஆப்செட் பிரிண்டர்ஸ், 50, கோவை ரோடு, காங்கயம் - 638 701. |
| இந்திய குடிமகனா | : | ஆம் |
| ஆசிரியர் பெயர் | : | S. ராஜநாயகம் |
| முகவரி | : | 86-A, தாராபுரம் ரேடு, காங்கயம் - 638 701. |
| இந்திய குடிமகனா | : | ஆம் |
| இதழுக்குரியவர் பெயரும் முகவரியும் | : | S. ராஜநாயகம் 86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. |

ராஜநாயகம் ஆகிய நான் மேலே தந்துள்ள விபரங்கள் நம்பகமும், உண்மையும் உடையவை என உறுதி கூறுகிறேன்.

(ஒப்பம்)

காங்கயம்.

S. ராஜநாயகம்

# தேவனுடைய வசனத்துக்கு நடுங்குதல்

நாம் வாழ்கின்ற தற்கால உலகில், நாம் பயப்படும் போது தான் பொதுவாக நடுங்குவதைப் பற்றி நினைப்போம்; ஆனால், நிச்சயமாக அந்த அளவுக்கு பயப்படுவது நல்லதல்ல. ஒருவர் தேவனுக்கோ அவருடைய வார்த்தைகளுக்கோ நாம் நடுங்க வேண்டும் என்று பொதுவாக நினைக்கமாட்டார். சிலர், தேவன் நம் எல்லோரையும் நேசிக்கிறார் நாம் எல்லோரும் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். ஒரு பிள்ளை தன்னுடைய தகப்பனுக்கு முன்பாக நடுங்க வேண்டுமா? இல்லை! என்று சொல்வார்கள்.

பயப்படுகிற அர்த்தத்தில் நடுங்குதலைப் பற்றி நாம் நினைத்தால், மேற்கூறப்பட்ட உணர்வோடு நான் ஒத்துப்போகிறேன். ஆனால், மற்றுமொரு கோணத்தில் பார்த்தால் நடுங்குவது நல்லதென்று பார்க்க முடியும். ஏசாயா 6 ஆம் அதிகாரம் இரண்டாம் வசனத்தில் ஏசாயாவின் வார்த்தைகளைக் கவனியுங்கள் " சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்". இங்கே தேவனோடு விசேஷித்த உறவை வைத்துக்கொள்ளுகிற மனிதனுடைய சில குணாதிசயங்களை நாம் காண முடியும். தேவன் இப்பிரபஞ்சத்திற்கே தேவனாயிருக்கிறார், ஆனால், நாம் சில குறிப்பிட்ட குணாதிசயங்களைப் பெற்றிருந்தால், அவர் மனிதனுடைய நிலைக்கு தன்னை தாழ்த்தி இறங்கிவர விருப்பமுள்ளவராயிருக்கிறார். தேவன் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிருப்பதில்லை. ஆனால், குறிப்பிட்ட மனித இருதயங்களில் வாசம் செய்கிறார்.

முதலாவதாக, நாம் ஆவியில் எளிமையுள்ளவர்களாகவும், நொறுங்குண்டவர்களாகவும் காணப்பட வேண்டும் அதாவது ஆவியில் தாழ்மையுள்ளவர்களாக காணப்பட வேண்டும். தேவன் ஒரு மனிதன் ஏழையாயிருக்கிறான் என்பதற்காக அவனை நோக்கிப் பார்ப்பதில்லை, ஆனால், ஆவியில் தாழ்மையுள்ளவர்களை அவர் நோக்கிப் பார்க்கிறார். அதுமாத்திரமல்ல, நாம் ஆவியில் நொறுங்குண்டவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இது பாவத்தினால் மிக ஆழமாக பாதிக்கப்பட்ட ஆவிதான். இது பெருமை மற்றும் சுயநீதிக்கு எதிர்ச் சொல்லாயிருக்கிறது. தேவன் இல்லை என்றால் நாம் ஒன்றும் இல்லை என்று உணர வேண்டும் என்றும், நாம் முழுமையாக அவரைச் சார்ந்திருக்க வேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார்.

இரண்டாவதாக, தேவன் ஏசாயா மூலமாக நாம் அவருடைய வசனத்துக்கு நடுங்க வேண்டும் என்று சொல்கிறார். நிச்சயமாகவே, தேவன் நாம் வசனங்களைப் படிப்பதற்கு வேதாக

மத்தை எடுக்கும் போது நடுங்க வேண்டும் என்று சொல்ல வில்லை. தேவன் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும் நமக்கு இருக்க வேண்டிய பயம் மற்றும் மரியாதை உணர்வைத் தான் தேவன் குறிப்பிடுகிறார். தேவன் சொல்லியிருக்கிறவைகளி லிருந்து நாம் ஒன்றையும் கூட்டவோ, எடுத்துப்போடவோ கூடாது (வெளி. 22:18,19). அதுமாத்திரமல்ல, தேவனுடைய வார்த்தைகளுக்கு நம் முழுமனதோடு கீழ்ப்படிய நாட வேண் டும். ஆனால், இத்தகைய மரியாதை அநேக மக்களிடத்தில் குறை வுபடுகிறது. வேதாகமம் தேவனுடைய வார்த்தைதான் என்று விசு வாசிக்கிறதாகச் சொல்லிக் கொள்பவர்களிடத்தில் கூட குறைவு படுகிறது. அநேகர் வேதாகமத்தை வாசித்து விட்டு அதன்பிறகு தங்கள் விருப்பப்படி வாழ்கிறார்கள். அநேகர் தங்கள் செயல் பாடுகளை மறைக்க முயற்சி செய்வார்கள். தங்கள் நடத்தைக ளுக்கு ஆதரவாக சாக்குபோக்குகளைச் சொல்வார்கள் அல்லது குறைந்தபட்சம் தங்கள் குற்றங்களின் கடுமையைக்குறைக்க சாக் குபோக்குகளை சொல்வார்கள். அநேகருக்கு பாவம் ஒரு பெரி ய பிரச்சனையாக இல்லை என்பது போல் தான் தோன்றுகிறது. மேலும், அவர்களுக்கு பாவம் என்பது அதிகமாக கவலைப்ப டக்கூடிய ஒன்றல்ல.

தேவனுடைய வார்த்தை நம்முடைய அதிகாரமும், நமக்கான சட்டமுமாயிருக்கிறது. அதற்கே நாம் இணங்க வேண் டும். அதற்கு நாம் எப்படியாவது கீழ்ப்படிய வேண்டும் என அவர் எதிர்பார்ப்பதாக தேவன் சொல்கிறார். சிலர் இதை ஒத் துக் கொள்வதாக சொல்கிறார்கள், ஆனால், பின்பு அவர்கள் கிறிஸ்து நமக்காக மரித்தார், ஆகையால், நாம் பூரண கீழ்ப்படி தல் இல்லாமலேயே தேவனோடு சரியான உறவு வைத்துக் கொள்ள முடியும் என தங்கள் பொறுப்புகளைத் தட்டி கழிக்கி றார்கள். அதுமாத்தி ரமல்ல, நாம் பலவீனமான மனிதர்கள் என் பது தேவனுக்குத்தெரியும், எனவே, நம்முடைய தோல்விகளை யும், குறைகளையும், தேவன் மன்னிப்பார் என்றும் அவர்கள் கூட் டிச் சொல்கிறார்கள். ஆயினும், நம் பாவங்கள் கிறிஸ்து மூலமாக மன்னிக்கப்படுகிறது என்பதற்காக பாவத்தின் கோரத்தன்மையை நாம் மறந்துவிடக்கூடாது. அதைப்போலவே, கிறிஸ்து நம்மு டைய பாவங்களுக்காக செலுத்தியத் தொகையை நாம் அலட்சி யப்படுத்தக்கூடாது அல்லது தேவன் முழுமையான கீழ்ப்படித லில் விருப்பமுடையவராக இல்லை என்று நினைத்து விடக்கூ டாது. நம் சமுதாயத்தின் மீது சோககரமான விமர்சனம் என்ன வென்றால் கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கைக்கும், கிறிஸ்தவர் களல்லாதவர்களுடைய வாழ்க்கைக்கும் கொஞ்சம் தான் வித்தி யாசம் இருக்கிறது என்பதுதான்.

தாழ்மையுள்ள, நொறுங்குண்ட இருதயமானது தேவனு டைய எதிர்பார்ப்புக்குத்தக்கதாக வாழத்தவறிவிட்டதை குறித்து

வேதனை அடைந்து ஆழமாக அதை உணரக்கூடியதாக காணப் படும். தேவன் தம்முடைய எதிர்பார்ப்பின்படி தம்முடைய பிள் ளைகள் வாழவேண்டும் என்றும் விரும்புகிறார். இயேசு பேதுரு வைப்பார்த்து நீ என்னை மறுதலிப்பாய் என்று சொன்ன சிலமணி நேரத்திற்குப் பிறகு இயேசு முன்னறிவித்தபடியே பேதுரு இயே சுவை மறுதலித்தான். ஆனால், பேதுரு தன்னுடைய செயலை நியாயப்படுத்த முயற்சி செய்யவில்லை அல்லது அது உண்மையி லேயே தன்னுடைய தவறல்ல என்று நினைக்கவில்லை, பேதுரு வெளியே போய் மனங்கசந்து அழுததாக மத்தேயு 26:75 சொல் கிறது, இது பேதுருவின் உண்மையான மனந்திரும்புதலைக் காட் டுகிறது. அப். 8 ஆம் அதிகாரத்தில் மாயவித்தைக்காரனாகிய சீமோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷனுடைய மனமாற்ற சம்பவத்தை நாம் வாசிக்கிறோம். அவன் மனமாற்றமடைந்த உட னே, பேதுரு தன்னுடைய கைகளை மற்றவர்கள் மேல் வைத்ததி னால் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டது போல் நான் எவன் மேல் என் கைகளை வைக்கிறேனோ அவன் பரி சுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என அப்போஸ்தலர்களிடத்தில் சீமோன் பணத்தைக் கொண்டு வந்து கேட்டான். 22 ஆம் வசனத்தில் பேது ரு சீமோனைப்பார்த்து " ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக் கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் " என்று சொன்னார். சீமோன் தன்னுடைய பாவத்தைக் குறைக்க அநேக சாக்குபோக்குகளை சொல்லியிருக்க முடிந்திருக்கும், ஏனென் றால், அவர் குறுகிய காலமாகத்தான் கிறிஸ்தவராக இருந்தார். ஆயினும், சீமோன் தன்னுடைய குற்றத்தை நியாயப்படுத்த முயற்சி செய்யவில்லை. அவர் இப்படியாக கெஞ்சிக்கேட்கிறார். " நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள்" என்றான் (அப். 8:24).


அந்த வார்த்தைகளை சீமோன் பேசினபோது அவருக்கு இருந்த நடுக்கத்தை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகி றது. சபையில் தேவனுடைய வார்த்தைகளுக்கு நடுங்குகிற அநே கர் தேவைப்படுகிறார்கள், அதைப்போலவே தேவன் எப்படி விரும்புகிறாரோ அதற்கேற்ப தங்கள் வாழ்க்கையை மாற்றுகிற ஊழியக்காரர்கள் தேவைப்படுகிறார்கள். மேலும் சபையில் பாவ உழையில் சிக்கித்தவிக்கும் அங்கத்தினர்கள் சாக்குபோக்கு சொல் லாமல் தங்கள் செயலை நியாயப்படுத்த முயற்சி செய்யாமல், உண்மையான மனந்திரும்புதலுடன், தேவனிடமும், மற்றவர்க ளிடமும் மன்னிப்புக்கேட்கிறவர்கள் தேவைப்படுகிறார்கள். இப் படிப்பட்டவர்களைத் தான் தேவன் ஆசீர்வதிப்பார்.

**BENNY MARTIN** **JERRY BATES**

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# திருமறை ஆசான்

இதழ் ஆசிரியரின்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| பொதிகை | TV | செவ்வாய் | காலை | 5:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

**ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.**

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.**
**தமிழ்நாடு, இந்தியா.**

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.